புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 07, 2013 | புரட்சி 12 | முழக்கம் 4 | விலை: ரூ.3.00

## சென்னை மாநாட்டில் சமூக நீதி இயக்கங்கள் சூளுரை

# ஜாதி வெறியை வீழ்த்துவோம்!

*ஒன்றுபட்ட இயக்கங்கள் வழியாக தமிழகத்தில் ஜாதி-தீண்டாமையை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனிய சக்திகளை தோற்றோடச் செய்வோம் என்று கழகம் கூட்டிய சென்னை மாநாட்டில் பல்வேறு சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் சூளுரைத்தனர்.*



சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழகத்தின் தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு 4.2.2013 அன்று மாலை 5.30 மணியளவில் சென்னை தியாகராயர் நகர் முத்தரங்கன் சாலையில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சியோடு தொடங்கியது. மண்டல அமைப்புச் செயலாளர் கு.அன்பு தனசேகரன் தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் நா. அய்யனார் வரவேற்புரை யாற்றினார். அவர் தனது உரையில், 'இந்த மாநாட்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிக்கு அனுமதி மறுத்த காவல்துறை பிறர் மனதைப் புண்படுத்தும் முழக்கங்களை எழுப்புவார்கள் என்று காரணம் கூறியிருந்தது. காலம் காலமாக தீண்டாமை அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சேரியில் உழலும் மக்கள் புண்பட்டுக் கிடப்பதைப் பற்றி இவர்களுக்குக் கவலை இல்லை; ஆனால், இதை சுட்டிக்காட்டி, உரிமை கோருவது புண்படுத்தும் செயலா என்று கேட்டார். திருமண வயதை 21 ஆக உயர்த்த வேண்டும் என்று கூறும் மருத்துவர் ராமதாசு, வாக்களிக்கும் வயதை 18லிருந்து 21 ஆக உயர்த்தக் கோருவாரா? என்று கேள்வி எழுப்பினார். தொடர்ந்து காஞ்சி மாவட்ட கழகத் தலைவர் டேவிட் பெரியார், சூத்திரர்களை பார்ப்பனரின் 'தேவடியாள் மக்கள்' என்று நிலைநிறுத்தும் மனு சாஸ்திர இழிவு இப்போதும் தொடர்ந்து கொண் டிருப்பதை எதிர்த்துதான் மனுசாஸ்திரத்தை தீயிட்டுக் கொளுத்துகிறோம் என்றார். தொடர்ந்து இளைஞர் இயக்க சார்பில் மருத்துவர் எழிலன் உரையாற்றினார்.

மருத்துவர் எழிலன் தனது உரையில் - மருத்துவர் என்பவர்கள் ஒரு பகுத்தறிவுவாதி யாகவே இருக்க முடியும். பகுத்தறிவு இல்லாத மருத்துவர்கள் தொழில் ரீதியாக செயல்படக் கூடியவரே தவிர, உண்மையான மருத்துவராக முடி யாது. மருத்துவ விஞ்ஞானம், மூடநம்பிக்கைகளை முற்றாகத் தகர்த்து எறிகிறது. இப்போது ஜாதியை காப்பாற்றப் புறப்பட்டிருப்பவர்களை நோக்கி மருத்துவ ரீதியாகவே சில கேள்விகளை முன் வைக்கிறேன். நீங்கள் பேசும் ஜாதிக்கு என்று தனியாக குருதி உள்ளதா? குருதி 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. எந்த ஜாதியினராக இருந்தாலும் இந்த நான்கு வகை குருதிதான் ஓடுகிறது. அறுவை சிகிச்சைக்கு ஒரு வன்னியருக்கு குருதி தேவைப்பட்டால் எனக்கு வன்னியர் குருதி மட்டுமே வேண்டும் என்று எந்த நோயாளியாவது கூறுவாரா? ஜாதியைத் தீவிரமாக ஆதரிக்கிற ஒருவர்

2 ஆம் பக்கம்



# உயிர்காக்க ஜாதியில்லை; பொருளீட்ட ஜாதியில்லை; திருமணத்தில் மட்டும் ஜாதியாம்!

*முதல் பக்கத் தொடர்ச்சி*

*உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு வந்தால், நான் வன்னியன், வன்னியன் சிறுநீரகத்தை மட்டுமே பொருத்த வேண்டும். நான் கவுண்டர், கவுண்டர் ஜாதி கண்களை மட்டுமே எனக்கு பொருத்த வேண்டும் என்று கூறுவதற்கு தயாராக இருக்கிறார்களா? கேட்கமாட்டார்கள்; உயிர் பயம்.*

*ஒரு ஜாதிப் பற்றுள்ள மருத்துவர், தன்னிடம் சொந்த ஜாதி நோயாளிகள் வந்தால் மட்டுமே போதும். மற்ற ஜாதிக்காரர்கள் வேண்டாம் என்று கூறுவாரா? ஆக உயிர் பயம் என்றால் அங்கே ஜாதி பார்ப்பதில்லை. பணம் வருகிறது என்றால் ஜாதி காணாமல் போய்விடுகிறது. திருமணம் என்று வந்தால் மட்டும் ஜாதி வந்துவிடுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொண்டு கருத்தரிக்கும் போது எத்தனையோ லட்சம் கருமுட்டைகளில் ஒரு கரு முட்டையால் மட்டுமே குழந்தை உருவாகிறது. அந்தக் கரு முட்டை எந்த ஜாதிக்குரியது என்று கூற முடியுமா? புத்தரும், வள்ளுவரும், வள்ளலாரும் ஜாதியை எதிர்த்தார்கள். “ஒரு பைசா தமிழன்” பத்திரிகை நடத்திய நமது மூதாதையர் அயோத்தி தாசப் பண்டிதர், ஆதி திராவிடர்களை ஜாதியற்ற வர்களாக அரசுப் பதிவேடுகளில் பதியச் சொன்னார். அரசியல் சட்ட வரைவுக் குழு தலைவர் புரட்சியாளர் அம்பேத்கர் சட்ட அமைச்சர் பதவியை தூக்கியெறிந்தபோது பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம் நியமிக்கப்படாததை சுட்டிக் காட்டினார். தாழ்த்தப்பட்ட தலைவர்களும் பிற்படுத்தப்பட்ட தலைவர்களும் இணைந்து போராடியதால்தான் நமக்கான உரிமைகள் கிடைத்தன. இந்த இடஒதுக்கீட்டு உரிமையால் பயனடைந்த மருத்துவர் ராமதாஸ், இப்போது தலித் மக்களுக்கு எதிராகப் பேசுவது என்ன நியாயம்? ஒடுக்கப்பட்ட கறுப்பர் இன மக்களின் விடுதலைக்காக வெள்ளைநிற வெறியை எதிர்த்து அமெரிக்காவில் பல தலைவர்கள் போராடினார்கள். அதன் விளைவால் கறுப்பர் இனத்தைச் சார்ந்த ஒபாமா, அந்நாட்டில் இரண்டாவது முறையாக அதிபராகியுள்ளார். ஆஸ்திரேலியாவின் பூர்வக்குடிகளான பழங்குடி மக்களை கொன்று குவித்துவிட்டு, அங்கே வெள்ளையர்கள் அதிகாரத்தைப் பிடித்தார்கள். அதற்காக ஆஸ்திரேலியப் பிரதமர், பழங்குடி மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார். சர்வதேச அளவிலான இன ஒதுக்கல் தடை சட்டத்தில் ஜாதி ஒதுக்கலையும் சேர்க்கவேண்டும் என்று அய்.நா.வை இந்தியாவிலுள்ள ஜாதி எதிர்ப்பாளர்கள் வலியுறுத்தியபோது ஜாதி இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை இதில் அய்.நா. தலையிடக் கூடாது என்று இந்திய அரசு கூறியது. ஆனால், ஜாதியை ஒழிப்பதற்கு எதையாவது செய்தார்களா? தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களில் ஊட்டச் சத்து குறைந்தவர்கள் 87 சதவீதம் பேர் என்று யுனெஸ்கோ புள்ளி விவரம் கூறுகிறது. அப்படியானால் இந்தியாவில் சுதந்திரம் கிடைத்தது யாருக்கு? பார்ப்பன உயர்ஜாதி கூட்டத்துக்குத் தானே? ஜாதியை பாதுகாக்கப் புறப்பட்டிருப்பவர்கள் இது பற்றி சிந்திக்க மாட்டார்களா?*

*கூடங்குளத்தில் அணுமின் திட்டத்தின் ஆபத்துகளை எதிர்த்து, அங்கே வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் போராடுவதை இந்திய அரசு அலட்சியப்படுத்துகிறது. கூடங்குளத்தில் 10 பார்ப்பனர்கள் இருந்திருந்தால் அத் திட்டத்தை இந்திய அரசு திணித்திருக்குமா? ஆபத்து எதுவும் இல்லை என்று பேசுகிறவர்கள், இத்திட்டத்தை மயிலாப்பூரில் தொடங்குவார்களா? ஜாதி நகர்ப் புறத்தில் ஒழிந்துவிட்டது என்று சிலர் வாதிடுகிறார்கள். எங்கே ஒழிந்திருக்கிறது? அகில இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் தலித் மாணவர்கள் அவமதிப்புக்குள்ளாகி, தற்கொலை செய்து கொள்ளும் அவலத்தை அதுபற்றி விசாரணை நடத்திய தோரத் குழு அம்பலப்படுத்தியது. எங்கும் எதிலும் ஜாதி வெறி தலைதூக்கி நிற்கிறது.*

*இந்த ஜாதி நோயை ஒழிப்பதற்கான ஒரே மருந்து பெரியாரியம்தான். பெரியாரின் கொள்கை கைத் தடியையும் அம்பேத்கரின் அறிவு நூல்களையும் ஆயுதமாக்கி ஜாதியை விரட்டியடிப்போம் என்றார் மருத்துவர் எழிலன்.*




**வழக்கறிஞர் விஜயகுமார் :** *உயர்நீதிமன்ற வழக்கறிஞர் விஜயகுமார் பேசுகையில், ஜாதி ஒழிப்புக்கு தமிழகத்தில் முற்போக்கு இயக்கங்கள் அணி திரட்டப்பட வேண்டும். ஏதோ, ஒரு இயக்கத்தால் மட்டும், இதை சாதித்துவிட முடியாது. அப்படி, பல்வேறு முற்போக்கு இயக்கங்களை திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ள திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு எனது பாராட்டுகளை தெரிவிக்கிறேன். நிறத்தால் வேறுபட்டுள்ள கறுப்பர்கள் என்றாலும் வெள்ளை யர்கள் என்றாலும் மரபணுக்கள் (டி.என்.ஏ.) அனைவருக்கும் பொதுவானதே என்று விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. தற்போது தேர்தல் அரசியலுக்காக ஜாதியைக் கையில் எடுத்துள்ளார் இராமதாசு. அவர், இதில் வெற்றிப் பெறப்போவது இல்லை. தமிழ்நாட்டில் 1970க்கு முன்பும் சரி, அதற்குப் பிறகும் சரி, ஆட்சியைப் பிடித்த கட்சிகள், அதற்காக ஜாதி வெறியைத் தூண்டிவிட்டதாக வரலாறு இல்லை. ஆட்சியமைப்பதற்கு ஜாதி வெறி பயன்பட்டதும் இல்லை. ஜாதி ஒழிய கல்வி அடிப்படையானது. கல்வி இப்போது தனியார் மயமாகி வியாபாரமாகி விட்டது. அதை எதிர்த்துப் போராட வேண்டும். மருத்துவர் ராமதாசு, தனது மகன் முதல்வராக முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார். அதற்காக ஜாதி வெறியைத் தூண்டிவிடுகிறார். அவர் வெற்றிப் பெறப் போவதில்லை என்றார் வழக்கறிஞர் விஜயகுமார்.*

**வழக்கறிஞர் ரஜினி:** *வழக்கறிஞர்ரஜினி பேசுகையில் - இந்த நாட்டில் நீதி என்பது சமூக நீதி; அநீதி என்பது மனுநீதி. பவுத்தத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் இடை விடாது தொடர்ந்த யுத்தம்தான், இந்த நாட்டின் வரலாறு என்றார் புரட்சியாளர் அம்பேத்கர். சூத்திரர் கூலி வாங்காமல் உழைக்க வேண்டும் என்கிறது மனுநீதி. கூலி கேட்டதால்தான் கீழவெண் மணியில் 44 தலித் மக்கள் உயிருடன் எரிக்கப் பட்டனர். மனுதர்மம்தான் இவர்களை சாகடித்தது என்று குறிப்பிட்ட ரஜினி. தொடர்ந்து பேசுகையில், தமிழ்நாட்டில் தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் டாக்டர் ராமதாசின் ஜாதிய அணி திரட்டலுக்கு எதிராக ஏன்போராட வரவில்லை. இதை எதிர்த்து களத்தில் நிற்பது திராவிடர் விடுதலைக் கழகம் தானே! அமைப்புக்குள்ளே ஜாதியை பேசுவதும், மேடைகளில் தமிழைப் பேசுவதும்தான் தமிழ் தேசியமா? என்று கேள்வி எழுப்பினார். ஜாதியை எதிர்க்காத தமிழ்தேசியம், இந்துத்துவா தான் என்று கூறிய அவர், முதலில் ஜாதி ஒழிக்கப்பட வேண்டும். அதற்கு ‘திராவிடர்’ கோட்பாட்டைக் கையில் எடுக்க வேண்டும். காதல் திருமணம் பெருக வேண்டும். திட்டமிட்டு காதலிக்கிறார்கள் என்கிறார் இராமதாசு, நாம் திட்டமிட்டே காதலிப்போம். இனி நடக்கிற திருமணங்கள் எல்லாம் திட்டமிட்ட ஜாதி மறுப்பு காதல் திருமணங்களாகவே நடக்கட்டும். தலித் மக்களுக்கு எதிராகப் பேசுவது தங்கள் கருத்துரிமை என்கிறார்கள். அதற்கு மட்டும், இவர்களுக்கு அரசியல் சட்டம் தேவைப்படுகிறது. ஆனால், உள்துறை அமைச்சர் ஷிண்டே, ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் பயிற்சி முகாம்களை நடத்துகிறது என்று சொன்னால் அவர் பதவி விலக வேண்டும் என்கிறார்கள். ஷிண்டேவுக்கு கருத்துரிமை கிடையாதா? என்ற கேள்வியை எழுப்பினார்.*

**அப்துல் சமது:** *தொடர்ந்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அப்துல் சமது உரையாற்றுகையில், பெரியார் இயக்கத்துக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான உறவுக்கு நீண்ட பாரம்பர்யம் உண்டு. அதன் தொடர்ச்சியாகவே இந்த மேடையில் பேசுகிறேன் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார். இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து என்று கூறிய பெரியார், இஸ்லாமிய மதம், திராவிடர் மதம் என்றார். பெரியார் என்றுமே எங்கள் நேசத்துக்குரிய தலைவர். உண்மையில், மனுசாஸ்திரத்தின் மறுப்புதான் இஸ்லாம் மார்க்கம். ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு கருத்தியலை வழங்கிய கோல்வாக்கர், வர்ணாஸ்ரமத்தை கேள்விக்குரியதாக்கி, இல்லாதொழிக்க வந்ததே இஸ்லாம் என்று எழுதினார். இஸ்லாமியர்களாகிய நாங்கள், மனு சாஸ்திர எதிர்ப்பாளர்கள். அதனால் தான் இந்த பெரியார் மேடையில் உரிமையோடு வந்து நிற்கிறோம். ஏதோ, இந்த மேடைக்கு வந்ததற்காக நான் பெரியாரைப் பேசுவதாக கருதிவிடக் கூடாது. இந்த அப்துல்சமது பேசுகிற ஒவ்வொரு மேடையிலும் பெரியாரைப் பற்றி குறிப்பிடாமல், உரை நிறைவடையாது. இன்றுவரை பார்ப்பனிய இந்துத்துவா சக்திகள் தீண்ட முடியாத நெருப்புத் துண்டாகத் திகழக் கூடிய தலைவராக பெரியார் விளங்குகிறார்.*

*வர்ணாஸ்ரமம் இப்போது எங்கே இருக்கிறது. அது ஒழிந்துவிட்டது என்று பேசுவோரும் இருக்கிறார்கள். இன்றைக்கும் மனித மலத்தை மனிதர்களே எடுக்கிறார்கள். இது வர்ணாஸ்ரமம் திணித்த அவலம். அந்த மலம் எடுக்கும் அருந்ததிய சமுதாயத்துக்காரர். இந்த நாட்டில் சங்கராச்சாரியாகிவிட்டால் அப்போது வர்ணாஸ்ரமம் ஒழிந்து விட்டது என்று ஒப்புக்கொள்ள முடியும். அதுவரை வர்ணாஸ்ரமம் இங்கே நீடித்துக் கொண்டு இருக்கிறது என்பதுதான் பொருள். பெயருக்குப் பின்னால், ஜாதிப் பெயரைப் போடுவதற்கே வெட்கப்படும் நிலைமையை இந்த மண்ணில் உருவாக்கியவர் பெரியார். ஆனால், இப்போது ஜாதியை பகிரங்கமாக நியாயப்படுத்தி சிலர் பேசுகிறார்கள். மாமல்லபுரத்திலே பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய சித்ரா பவுர்ணமி விழாவில் ஒரு நாடகம் போட்டிருக்கிறார்கள். மக்கள் தொலைக்காட்சியிலும் அது ஒளிபரப்பப்பட்டதை*

*3 ஆம் பக்கம்*

# காதல் திருமணங்களே - ஜாதியை வீழ்த்தும்!

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

நான் பார்த்தேன். அதில் வன்னியர்கள், ஷத்திரிய வம்சத்தில் வந்த பெருமைக்குரியவர்கள். நெருப்பிலிருந்து பிறந்தவர்கள் என்று, தங்களது ஜாதிய ஷத்திரிய வம்த்துக்கு பெருமை கொண்டாடினார்கள். இப்படி ஷத்திரியர் என்பதை, இவர்கள் ஒப்புக் கொண்டாலே, பிராமணர், வைசியர், சூத்திரர் என்று சமுதாயத்தைப் பிளவுபடுத்திய மனுசாஸ்திரத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதுதானே பொருள்? ஒருவன் தன்னை ‘பிராமணன்’ என்று அறிவித்துக் கொண்டால், ஏனைய மக்களை தங்களுக்கு கீழானவர்களாகவும், ‘சூத்திரர்’களாகவும் அறிவிக்கிறார்கள். பெரியார் எளிமையாக புரியும்படி கூறினார், “ஒரு வீதியில் ஒரு வீட்டில் மட்டும், ‘இது பத்தினி வாழும் வீடு’ என்று பெயர்ப் பலகை போட்டால் என்ன அர்த்தம்? ஏனைய வீடுகளில் வாழ்வோர் ‘பத்தினி’கள் அல்ல என்பது தானே?” என்று கேட்டார்.

இராமதாஸ் தன்னை ஷத்திரியன் என்று கூறி, வர்ணாஸ்ரமத்தை ஆதரிக்கிறார். இராமதாசின் இந்த வர்ணாஸ்ரமத்தை நாங்கள் எதிர்க்கிறோம். வர்ணாஸ்ரம ஜாதிய ஒடுக்குமுறைகளை சந்திக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கம்தான் நாங்கள் நிற்போம். அவர்களே எங்களின் உறவுகள் என்றார் அப்துல் சமது.

1932 ஆம் ஆண்டு லண்டனில் வட்டமேஜை மாநாடு நடந்தபோது, அதில் இஸ்லாமியர்களின் பிரதிநிதியாக பங்கேற்ற ஆகாகானை, காந்தி தொடர்பு கொண்டு, இஸ்லாமிய சமூகத்தின் 14 அம்ச கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம். அம்பேத்கரின் இரட்டை வாக்குரிமையை நீங்கள் ஆதரிக்கக்கூடாது என்று கேட்டபோது, காந்தி அவர்களே, நாங்கள் அம்பேத்கர் பக்கம்தான் நிற்போம் என்று உறுதியாகச் சொன்னார் ஆகாகான். இந்த செய்தியை புரட்சியாளர் அம்பேத்கரே பதிவு செய்திருக்கிறார். அவரது கருத்துத் தொகுப்பு நூல்களின் 37வது பகுதியில் இது இடம் பெற்றிருக்கிறது. அரசமைப்பு சட்ட அவைக்கு பிரதிநிதிகளைத் தேர்வு செய்தபோது, பம்பாய் மாகாண சட்டசபையிலிருந்து அம்பேத்கரை தேர்வு செய்ய, அவருடைய கட்சி உறுப்பினர்கள் யாரும் இல்லை. எனவே வங்காள சட்டசபையிலிருந்து முஸ்லிம் லீக் ஆதரவை வழங்க முன் வந்தது; அம்பேத்கர் தேர்வு செய்யப்பட்டார்.

உலகிலேயே நாத்திகம் பேசும் ஒரு இயக்கத்தோடு, இஸ்லாமியர்கள் கைகோர்த்து நிற்பது இங்கே மட்டும்தான், வேறு எங்குமில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் மீது சுமத்தப்பட்ட இழிவுகளும் ஒடுக்குமுறைகளும் கடவுள் பெயரால் நிலைநாட்டப்பட்டதால் அந்தக் கடவுளை எதிர்க்க பெரியார் நாத்திகம் என்ற ஆயுதத்தை எடுத்தார். அந்த புரிதல் எங்களுக்கு உண்டு. பெரியார் கொள்கையின் தொடர்ச்சியாக மனு சாஸ்திரத்தை வர்ணாஸ்ரமத்தை எதிர்த்து நடத்தப்படும் இந்த இயக்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இதில் உறுதியாக நிற்போம் என்றார் அப்துல் சமது.

**வழக்கறிஞர் அஜிதா :** வழக்கறிஞர் அஜிதா பேசுகையில் - ஜாதியம் வன்முறை வழியாக தனது அதிகாரத்தை நிறுவுகிறது. அதன் காரணமாகவே பெண்கள் மீது வன்முறை ஏவப்படுகிறது. டெல்லியிலே நடந்த பெண்கள் மாநாட்டில் பெண்ணுரிமை பேசும் பெண்கள், ஜாதி எதிர்ப்பையும் பேச வேண்டும். ஜாதியத்துக்கும் பெண்ணடிமைக்கும் உள்ள உறவு இறுக்கமானது என்று பலரும் ஒப்புக் கொண்டார்கள். அய்ரோப்பிய நாடுகளுக்கான நாடாளு மன்றம் இந்தியாவில் தலித் பெண்கள் மீதான வன்முறையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. இப்போது ஜாதியைக் காப்பாற்றும் வலிமையான அமைப்பு திருமணமாகும். எனவே ஜாதி மறுப்பு திருமணங்கள் மட்டுமே நடக்கக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்தோர் குழந்தைகளை ஜாதியற்றவர்கள் என்று அறிவித்து, தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இப்போது ஜாதிக்கு ஆதரவாக பேசும் ராமதாசு, தங்கள் ஜாதியில் நடக்கும் திருமணங்களில் எந்த வன்னியரும் வர தட்சணை வாங்கக் கூடாது என்று அறிவிப்பாரா? அவரால் அப்படி கூற முடியுமா? ஜாதிக்கு ஆதரவாக பேசுவது அடிமைத் தனத்தை நியாயப் படுத் தும் காட்டுமிராண்டித் தனம் என்றார், வழக்கறிஞர் அஜீதா.



**எஸ்.கே மகேந்திரன்:** தொடர்ந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தீண்டாமை ஒழிப்பு முன்னணியைச் சார்ந்தவருமான எஸ்.கே மகேந்திரன், நாட்டை ஆள்வது அரசியல் சட்டம் என்று சொல்லப்பட்டாலும் மனுதர்மத்தின் ஆதிக்கமே பல துறைகளில் நீடிக்கிறது. உயர்கல்வி நிறுவனமான அய்.அய்.டி.யில் சேருவதற்கான நுழைவுத் தேர்வில் எனது உறவுக்காரப் பெண் முதன்மையாக அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சிப் பெற்றார். ஆனாலும் அவருக்கு தாழ்த்தப்பட்டோர் இடஒதுக்கீட்டின் கீழ்தான் சேர்த்தார்களே தவிர, பொதுப் போட்டியின் கீழ் சேர்க்கப்படவில்லை. இது முறைகேடு அல்லவா என்று நான் அய்.அய்.டி. பேராசிரியர்களை கேட்டபோது, அய்.அய்.டி.யில் பொதுப் பட்டியலில் இடம் பெற்றுவிட்டால் தலித் மாணவர்கள் பார்ப்பனர் தரும் குடைச்சலில் மன நோயாளிகளாகிவிடுவதாக என்னிடம் கூறினார்கள். பிற்படுத்தப்பட்ட சமுதாய பேராசிரியர்கள்கூட அய்.அய்.டி.யில் கிடையாது. பார்ப்பனர்கள் ஆதிக்கம்தான்.

அப்துல்கலாம் ஒரு ஏவுகணையை கண்டு பிடித்தார். அதற்கு என்ன பெயர் சூட்டினார்கள்? ‘அக்னி’ என்று பெயர் சூட்டினார்கள். கலாம் பெயரைக்கூட சூட்டியிருக்கலாம். சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள். அர்ஜுனன் பெயர். நியாயமாக கட்டை விரலைப் பறி கொடுத்த ஏகலைவன் பெயரையல்லவா சூட்டியிருக்க வேண்டும்?

தமிழ்நாட்டிலே இப்போதும் ஒரு தலைமைச் செயலாளராகவோ, நிதித் துறை செயலாளராகவோ யார் வர முடிகிறது? கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோதுகூட தலைமைச் செயலாளர் பதவிக்கு பல மூத்த அதிகாரிகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு, ஒரு பார்ப்பன அதிகாரியை தேடிப் பிடித்துத் தானே நியமித்தார். 2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக புதிய விடுதி கட்டப்பட்டது. அப்போது நான் சட்டமன்ற உறுப்பினர். அப்போது 43 தலித் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டப்பட்ட விடுதிக்கான செலவை மட்டும் ஆதி திராவிடர் நலத் துறை நிதியிலிருந்துதான் கலைஞர் கருணாநிதி எடுத்தார். காலம் காலமாக நிலைத்து நிற்கும் கட்டிடத்துக்குக்கூட அவற்றை எங்களைப் போன்ற தலித் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கிட, ஆதிதிராவிடர் நல நிதியைத் தான் பயன்படுத்தினார்கள். வர்ணாஸ்ரமம் நிலை நிறுத்திய பார்ப்பன ஆதிக்கம், தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் ராமதாசு தங்களின் ஜாதிக்கான பிரதிநிதியாக தன்னை கூறிக் கொண்டு, ஜாதியை நியாயப்படுத்துகிறார். ஜாதிகளின் கூட்டமைப்பை ஊர்ஊராகக் கூட்டுகிறார். இவர், எப்படி எல்லோருக்குமான பிரதிநிதியாக இருக்க முடியும்? அதற்கான அதிகாரத்தை இவருக்கு யார் தந்தது? - என்று கேட்டார், தோழர் மகேந்திரன்.

**பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன்** பேசுகையில் - மனு சாஸ்திரம் இப்போதும் இயங்கிக் கொண்டிருப்பதை பல்வேறு உதாரணங்களை சுட்டிக்காட்டி விளக்கினார். மனு சாஸ்திரம் கட்டமைத்த ஜாதி, தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடு முழுதும் நடத்தும் என்றார்.

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி** - ஜாதி தீண்டாமை ஒழிப்புக்காக கழகம் நிறைவேற்றிய தீர்மானங்களை விளக்கி மாநாட்டை நிறைவு செய்தார். (உரை பின்னர்) சென்னை மாவட்ட அமைப்பாளர் சுகுமாறன் நன்றியுரை யுடன் இரவு 10.30 மணியளவில் மாநாடு நிறைவடைந்தது. மாநாட்டில் கழகப் பொருளாளர் இரத்தின சாமி, அமைப்புச் செயலாளர் தாமரைக்கண்ணன், சேலம் மண்டல அமைப்புச் செயலாளர் சக்திவேலு மற்றும் மேட்டூர் மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்ட அமைப்பாளர் திலிபன் தலைமையில் ஒரு வேனில் வேலூர் மாவட்ட கழகத் தோழர்களும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நா. அய்யனார் தலைமையில் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து இரண்டு வேன்களிலும், தஞ்சை தோழர்கள் ஒரு வேனிலும் அரக்கோணம் கிராமப் பெண்கள், விடுதலை இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் ஒரு வேனிலும் மாநாட்டுக்கு திரண்டு வந்திருந்தனர். தர்மபுரி மாவட்டத்தில் நடந்த சாதிவெறித் தாக்குதல்களை விளக்கும் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மாநாடு தொடங்குவதற்கு முன்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தோழர்களோடு ஊர்வலமாகச் சென்று தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

மாநாட்டையொட்டி திட்டமிடப்பட்டிருந்த ஜாதி-தீண்டாமை ஒழிப்புப் பேரணிக்கு காவல் துறை கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கவே உயர்நீதிமன்றத்தில் மாநாடு நடைபெறும் நாளன்று கழக சார்பில் தடையை நீக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் ரஜினிகாந்த், மூத்த வழக்கறிஞர் சங்கர சுப்பு வாதாடினார்கள். நீதிபதி வழக்கை வேறு தேதிக்கு தள்ளி வைத்ததால் திட்டமிட்டபடி பிப். 4 ஆம் தேதி பேரணியை நடத்த முடியவில்லை. ஜாதிகளைக் கடந்து பல்வேறு முற்போக்கு சமுதாய அரசியல் இயக்கங்களை ஒருங்கிணைத்து தலித் மக்களுக்கு ஆதரவாகவும் ஜாதி வெறி சக்திகளுக்கு எதிராகவும் திராவிடர் விடுதலைக் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சியை மாநாட்டில் பேசிய பலரும் பாராட்டினர்.

**– நமது செய்தியாளர்**


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


### மாநாட்டு மேடையில் அம்பேத்கர் திரைப்படத்தின் தமிழ்ப் பதிப்பு வெளியிடப்பட்டது

கழக மாநாட்டு மேடையில் புரட்சியாளர் அம்பேத்கர் வரலாற்றை விளக்கிடும் திரைப்படம் தமிழ் உரையாடல் வடிவில் குறுந்தகடாக (டிவிடி) வெளியிடப்பட்டது. மும்பை விழித்தெழு இளைஞர் இயக்கத்தைச் சார்ந்த அதன் ஒருங்கிணைப்பாளர்கள் பன்னீர்செல்வம், தங்கபாண்டியன், சிறீதர், பொன். தமிழ்ச்செல்வன், சென்னை மகிழ்நன் ஆகியோர் முயற்சியில் இந்த குறுந்தகடு தயாரிக்கப்பட்டுள்ளது. ‘இந்தக் குறுந்தகடு விற்பனைக்கு அல்ல’ என்ற பதிவுடன் இலவசமாக வழங்கப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழு சார்பில் மகிழ்நன் பேசுகையில்: “காலம் காலமாக சேரிகளில் ஒதுக்கப்பட்ட நாங்கள், சுயமரியாதைக்காக போராடுகிறோம். எங்களிடமிருந்து பெரியாரை அன்னியப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. எங்களின் கூடுதலான சுயமரியாதைக்கு பொறுப்பேற்று உழைத்த பெரியாரை விட்டு, நாங்கள் ஒரு போதும் விலக மாட்டோம்” என்று உணர்வுபூர்வமாக தனது கருத்தைப் பதிவு செய்தார்.

DATE OF PUBLICATION 06.02.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மாநாட்டு மேடையில் ஜாதி மத மறுப்புத் திருமணம்



சென்னையில் நடந்த தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாட்டு மேடையில் ஜாதி, மத மறுப்பு காதல் திருமணத்தை கூடியிருந்த மக்களின் வாழ்த்தொலிக்கிடையே கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். கொளத்தூர் மணி இது பற்றிக் குறிப்பிடுகையில், ஈரோட்டில் நடந்த கழக மாநாட்டில் மூன்று சாதி மறுப்புத் திருமணங்கள் நடந்தன. இந்த மாநாட்டு மேடையிலும் ஜாதி-மத மறுப்பு திருமணம் ஒன்று இப்போது நிகழ உள்ளது. மருத்துவர் ராமதாசு, சமுதாயத்தின் 80 சதவீத மக்களை ஒரு பிரிவாகவும் 20 சதவீத மக்களை ஒரு பிரிவாகவும் பிரித்து வைத்துள்ளார். அவர் பிரித்து வைத்துள்ள 80 சதவீதப் பிரிவைச் சார்ந்தவர்தான். மணமகன், மருத்துவர் ராமதாசு விதித்த ஜாதி கட்டளையை புறந்தள்ளி ஜாதி மறுப்பு திருமணம் செய்ய முன் வந்துள்ளார் என்று அறிவித்தபோது, பலத்த கரவொலி எழுந்தது. வை. மாணிக்கம், எம்.எஸ்.சி., பி.எட். அவர்களுக்கும் (விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம் விரியூர் என்ற ஊரைச் சார்ந்த வையாபுரி-செல்வாம்பாள் மகன்) இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த ஹாரிஃபா, பி.ஏ.வுக்கும் (சங்கராபுரம் வட்டம் சின்னக் கொள்ளியூர் கவுஸ் முகமது-ஷகீலா ஆகியோரின் மகள்) வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழி கூறி திருமணத்தை நடத்தி வைத்தார். ‘மணமக்கள் வாழ்க; ஜாதி ஒழிக’ என்ற முழக்கங்கள் பார்வையாளர்களிடமிருந்து பீறிட்டு எழுந்தன. ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்கு கூடுதல் சிறப்பாக இந்த மணவிழா அமைந்தது. மணமக்கள் கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

## திருப்பதியில் ராஜபக்சேவுக்கு கழக சார்பில் கருப்புக் கொடி

*திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை:*

ஈழத்தில் தமிழர்களை இனப்படுகொலை செய்த போர்க்குற்றவாளி இராஜபக்சே இரத்தம் தோய்ந்த கரங்களோடு பீகாரில் புத்தகயாவுக்கும் திருப்பதியில் ஏழுமலையான் தரிசனத்துக்கும் வருகிறாராம்; இந்திய அரசு தமிழர்களின் உணர்வுகளை அவமதித்து இராஜபக்சேவுக்கு மீண்டும் மீண்டும் சிவப்புக் கம்பள வரவேற்பு தந்து வருகிறது. இந்த நிலையில் திருப்பதி கோயில் நிர்வாகமும் இராஜபக்சேவை கவுரவித்து வேதமந்திரங்களுடன் சிறப்பு பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இராஜபக்சேவின் வருகைக்கு நமது எதிர்ப்பைக் காட்டிட பிப்ரவரி 8 ஆம் தேதி காலை திருப்பதியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் கருப்புக் கொடிகளுடன் திரளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– கொளத்தூர் மணி, தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

## சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் நடத்திய குறும்படப் போட்டி

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் சார்பில் கோவை மண்டல கல்லூரி மாணவர்களுக்கான குறும்படப் போட்டி பரிசளிப்பு விழா 27.1.03 ஞாயிறு காலை 10 மணிக்கு திருப்பூர் அன்னபூர்ணா கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் கு.பரமேசுவரி தலைமை தாங்கினார். மற்றும் மா.பிரகாசு, அ.ப.சிவா, பாரதிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்குறும்பட போட்டியில் 25 குறும்படங்கள் பங்கேற்றன. அதில் 5 குறும்படங்கள் திரையிட தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் 3 படங்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது- சிறந்த படங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று படங்கள் முறையே


1. இரண்டு கிராம் தங்ககாசு - கோணங்கள் - இயக்கம் செம்மலர் அன்னம், பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோவை.
2. 10 கிராம் வெள்ளி - தி ஜேர்னலிஸ்டு - இயக்கம் - தமிழ்ச்செல்வன், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
3. 10 கிராம் வெள்ளிக் காசு - இயக்கம் குமார், அவினாசி.

பங்கேற்ற மற்ற படங்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது. போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் வீ.சிவகாமி, திருச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முனைவர் ஆ.புரட்சிக் கொடி, சக்தி பிலிம்ஸ் மா.சுப்பிரமணியம் ஆகியோர் வருகை தந்தனர்.

மதுபான கடை திரைப்பட இயக்குனர் கமலக்கண்னன், ‘வெங்காயம்’ திரைப்பட இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார் ஆகியோர் பரிசுகளை வழங்கி சமூக மாற்றத்தில் திரைப்படங்களின் பங்கு குறித்து சிறப்புரையாற்றினர்.

**செய்தி: அ.பா. சிவா**

# சேலத்தில் தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு





## பிரதமர் வீடு முற்றுகை: ம.தி.மு.க. தோழர்களுக்கு உணர்ச்சிமிகு வழியனுப்பு நிகழ்ச்சி

இராஜபக்சேவுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் வீட்டை முற்றுகையிட ம.தி.மு.க. தோழர்கள் பிப்.5 ஆம் தேதி காலை டெல்லி புறப்பட்டுச் சென்றனர். அவர்களுக்கு கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆடை போர்த்தி, நூல்கள் வழங்கி, எழும்பூர் ரயில் நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th February 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 14, 2013 | புரட்சி 12 | முழக்கம் 5 | விலை: ரூ.3.00


# ‘தேசத்தின் மனசாட்சிக்கு’ – அப்சல்குரு பலியாக்கப்பட்டார்

- ***இந்திய மக்களின் கூட்டு மனசாட்சியை திருப்திப்படுத்துவதற்காக,***
- ***இந்தியாவின் இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலை ஈடு செய்வதற்காக,***
- ***குற்றம்சாட்டப்பட்டவர், சரணடைந்த தீவிரவாதியாக இருந்தாலும் தேசதுரோக மனநிலையிலே உள்ளார் என்பதற்காக,***

*அப்பாவி ஒருவரின் உயிரை இந்தியப் பார்ப்பன நேசம், திகார் சிறையில் உயிர் பலி கொடுத்து மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது. அப்சல்குருவைத்தான் குறிப்பிடுகிறோம். அப்சல் குருவுக்கு மரண தண்டனையை உச்சநீதிமன்றம் வழங்கியதற்கு அவர் செய்துள்ள குற்றங்களைப் பட்டியலிடாதவர்கள் மனசாட்சியையும் மனநிலையையும் மதிப்பிட்டிருப்பது, ஒரு வரலாற்று அவலம்.*

*உச்சநீதிமன்றத் தீர்ப்பு இப்படி கூறுகிறது:*

> *“பலரும் மரணமடைவதற்கும் பெரும் இழப்புகளுக்கும் காரணமான இந்தச் சம்பவத்தால் இந்த தேசம் முழுவதும் அதிர்ச்சியடைந்துள்ளது. குற்றவாளிக்கு மரண தண்டனை அளிக்கப்படுவதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனசாட்சி திருப்தி அடையும். சமூக ஒற்றுமை, தேச ஒருமைப்பாடு, இந்தியாவின் இறையாண்மை ஆகியவற்றுக்கு எதிராக இந்தப் பயங்கரவாதிகள் மற்றும் சதிகாரர்கள், முன்வைத்துள்ள இச்சவாலை, இந்தத் துரோக நடவடிக்கையின் சதிகாரன் என நிறுவப்பட்டுள்ளவனுக்கு உச்சபட்ச தண்டனையை அளிப்பதன் மூலமே ஈடு செய்ய முடியும். மனுதாரர் ஒரு சரணடைந்த தீவிரவாதி. தேசத்துரோக நடவடிக்கைகளைத் தொடரும் மனநிலையுடையவன். இவன் ஒரு சமூகத் தீமை. இவன் இல்லாதொழிக்கப்படவேண்டும். எனவே நாங்கள் இந்த மரணதண்டனையை உறுதி செய்கிறோம்.”*


*உலகில் 140க்கும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை ஒழித்துவிட்ட நிலையில் தேசத்தின் மனசாட்சியை திருப்பிப்படுத்துவதற்காக திருந்தி வாழ நினைத்த ஒரு அப்பாவியின் உயிரை கொடூரமாக அற்ப அரசியல் லாபத்துக்காக இந்த பார்ப்பன தேசம் பறித்துவிட்டது.*

*விதிவிலக்காக சில ஊடகங்கள் தவிர, ஏனையவை ஒரே குரலில் தேசத் துரோகிக்கு தூக்கு; மக்கள் மகிழ்ச்சி என்றே ஒரு சார்பாக செய்திகளை வெளியிட்டு கொண்டாட்டம் போடுகின்றன.*


*தன் மீது சாட்டப்பட்ட குற்றத்துக்கு எதிராக தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கான உரிமைகளையோ, வாய்ப்புகளையோ வழங்க மறுத்து, ஒரு சக மனிதனை தூக்கில் சாகடிப்பதுதான் இந்த தேசத்தின் மனசாட்சியா? அப்போதுதான் இந்த மனசாட்சி திருப்தியடையுமா?*

*நாட்டை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து கொண்டிருக்கும் ‘தேசபக்தர்களும்’ ஊடகங்களும் உண்மைகளை மூடி மறைத்து பொய்யையும் புனை சுருட்டையும் பரப்பிக் கொண்டிருக்கின்றன ஒரு சில ஊடகங்களே விதிவிலக்கு. தவிர பல ஊடகங்கள் அப்சல் குருவுக்கு மறுக்கப்பட்ட நியாயங்களையும் அவர்மீது பொய்யாக திணித்த வழக்குகளையும் மூடி மறைத்து வருகின்றன. அந்த உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு உண்டு.*

- *2001, டிசம்பர் 3 ஆம் தேதி, நாடாளுமன்றத்தின் முன் நடந்த தாக்குதல் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இது வன்மையான கண்டனத்துக்குரியது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட*



*அப்சல்குரு*



*அப்சல்குரு மனைவி*

*வேண்டியவர்கள்தான். ஆனால், இந்த கொடும் குற்றத்தில் ஈடுபட்ட 5 தீவிரவாதிகளும் அதே இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். நாடாளுமன்றத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட 7 பேரும் இதில் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கான திட்டங்களை வகுத்தவர்கள், மசூத் அசார், காசி பாபா, தாரிக் அகமது என்று காவல்துறை தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டது. ஆனால், அவர்களை பாதுகாப்புப் படையோ, டெல்லி சிறப்புப் போலீசோ கைது செய்யத் தவறிவிட்டன. அவர்கள் வேறு நாட்டில் இப்போதும் இருக்கின்றனர். இந்த நிலையில் நாடாளுமன்றத்தை உண்மையில் தாக்கியது யார் என்பதற்கான அடையாளங்கள் எவருக்குமே தெரியாது.*

- *ஆனால், நாடாளுமன்றத்தைத் தாக்கியதாக ‘குற்றவாளிகள்’ எவரையாவது சிலரை நாட்டுக்கு அடையாளப்படுத்த வேண்டிய நெருக்கடியில் பாதுகாப்புப் படை இருந்தது.*
- *தாக்குதல் நடத்திய அடுத்த இரண்டாவது நாளிலேயே டிசம்பர் 15 ஆம் தேதி நான்கு பேரை சிறப்புப் புலனாய்வுத் துறை கைது செய்து, இவர்கள்தான் தாக்குதலுக்கு திட்டமிட்டவர்கள் என்று குற்றம்சாட்டியது. டெல்லி பல்கலை உதவிப் பேராசிரியர் ஜீலானி, அப்சல் குரு, அவரது ஒன்றுவிட்ட சகோதரர் சவ்கத்குரு, அவரது கர்ப்பிணி மனைவி நவ்ஜோதி ஆகியோரே குற்றம் சாட்டப்பட்டவர்கள்.*
- *தாக்குதலில் ஈடுபட்ட சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகள் தங்கள் சட்டைப் பைக்குள்ளேயே திட்டமிட்டவர், மற்றும் உதவி செய்தவர்களின் விவரங்களையும் முக்கிய தொடர்பு எண்களையும் வைத்திருந்ததார்களாம். அதனடிப் படையில் “குற்றவாளி”களை கைது செய்ததாக புலனாய்வுத் துறை கூறியது.*
- *அன்றைக்கு ஆட்சியிலிருந்த வாஜ்பாய் தலைமையிலான ஆட்சியும் ஊடகங்களும் இதை உணர்ச்சிக்களமாக கட்டமைத்தன.*
- *குற்றம் சாட்டப்பட்டவர்களை சட்டரீதியாக தண்டிக்க முடியாது என்பதை உணர்ந்த டெல்லி சிறப்புக் காவல்துறை, பொய் வழக்குகளின் ஓட்டைகளை அடைத்திட, பத்திரிகையாளர், தொலைக்காட்சியாளர் முன் விசாரணை நடத்தும் ஒரு “அதிசயத்தை” அரங்கேற்றியது. பார்ப்பனர்களும் இந்துத்துவா உணர்வு கொண்டவர்களும் நிறைந்த ஊடகவியலாளர்களின் சந்திப்பு ஒன்றை புதுடில்லி லோடி சாலையிலுள்ள புலனாய்வு சிறப்புப் பிரிவு அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, அங்கு அப்சல்குரு கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். “நாடாளு மன்றத் தாக்குதலுக்கு நானே திட்டமிட்டேன்” என்று தன்னைத் தானே குற்றம்சாட்டிக் கொள்ள வேண்டும் என்று அப்சல்குரு அச்சுறுத்தப்பட்டார். அப்படி கூறாவிட்டால் ஏற்கனவே சட்டவிரோதமாக காவலில் வைக்கப்பட்டுள்ள அப்சல் குரு தம்பி பிணமாக்கப்படுவார் என்று அச்சுறுத்தினார்கள். இப்படி ஒரு சட்டவிரோத கூத்து, எந்த விசாரணையிலும் நிகழ்ந்தது இல்லை. அப்போதும்கூட பேராசிரியர் ஜிலானி சதியில் ஈடுபட்டார் என்று கூறுவதற்கு மறுத்த அப்சல்குரு பத்திரிகையாளர்கள் முன்னிலையிலேயே மிரட்டப்பட்டார். நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டிய வரை அதற்கு முன்பே ஊடக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது பற்றி நீதிமன்றத்தில் கேள்வி வந்தபோது அப்படி ஒரு நிகழ்வே நடக்கவில்லை என்று புலனாய்வுத் துறை அதிகாரி அப்பட்டமாக பொய் சொன்னார்.*
- *பொய் வழக்கு நிலைக்காததால் ஏ.எஸ்.ஆர். கிலானியும், சவுகத் குருவின் மனைவி நவ்ஜோத் சந்துவும், விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். சவுகத் குருவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையையும் உச்சநீதிமன்றம் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைந்தது. கடைசியாக தேசத்தின் ‘கூட்டு மன சாட்சி’யின் ‘படையலுக்கு’ அப்சல் குருவை நரபலியாக்க முடிவு செய்தார்கள்.*
- *தடை செய்யப்பட்ட எந்த ஒரு அமைப்பிலும் அப்சல் குரு உறுப்பினராக இல்லை என்பதை உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டது. ‘பொடா’ சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் நீதிமன்றம் ஏற்கவில்லை. காரணம் அவை எல்லாமுமே வலுவற்றவைகளாக இருந்தன. காவல்துறை சார்பில் விசாரிக்கப்பட்ட 80 சாட்சிகளிலும் ஒருவர்கூட அப்சல்குரு பயங்கரவாதத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறவில்லை. ஆனாலும் சில ஊடகங்கள் திட்டமிட்டு, ‘ஜய்ஷர்-ஏ-முகம்மது’ எனும் பயங்கரவாத அமைப்பைச் சார்ந்தவர் என்றே மீண்டும் மீண்டும் பொய்யைப் பரப்பின. இப்போதும் பரப்பி வருகின்றன. (‘இந்து’ நாளேடு மட்டுமே இதில் நேர்மையாக தனது கருத்தை பதிவு செய்து வருகிறது.)*
- *காஷ்மீர் குடிமக்களான அப்சல்குரு மருத்துவக் கல்லூரியில் ஓராண்டு படித்துக் கொண்டிருந்த போது காஷ்மீர் இளைஞர்களின் உணர்வுகளில் உந்தப்பட்டு, ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியில் இணைந்து, பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப் பகுதியில் பயிற்சிக்கு போனார் என்பது உண்மை. ஆனால், மூன்று மாதங்களிலேயே பாகிஸ்தான் காஷ்மீரை தனது நாட்டுடன் இணைப்பதற்காகவே இந்தப் பயிற்சிகளை அளிக்கிறது என்பதைப் புரிந்து, அதை வெறுத்து பயிற்சியைத் தொடர மறுத்து திரும்பிவிடுகிறார்.*
- *காஷ்மீர் திரும்பிய அப்சல்குரு, எல்லை காவல் படையின் முன் சரணடைந்து, இனி திருந்தி வாழப் போவதாகக் கூறிவிட்டார். சரணடைவதற்கு முன், வேறு இரு ‘தீவிரவாதி’களை சரணடையச் செய்ய வேண்டும் என்று எல்லை பாதுகாப்புப் படை விதித்த நிபந்தனைகளையும் ஏற்று செயல்பட்டார். அவர் சரணடைந்த போராளி என்பதற்கான சான்றிதழையும் எல்லைப் பாதுகாப்புப் படை வழங்கியது.*
- *ஆனால், சரணடைந்த போராளிகளை அவ்வப்போது முகாம்களுக்கு இழுத்துச் சென்று சித்திரவதை செய்வதும், விடுதலை செய்வதற்கு லஞ்சம் கேட்பதும், பாதுகாப்புப்படையின் வழக்கம். இப்படி அடிக்கடி சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டார் அப்சல்குரு.*
- *ஒருமுறை ‘ஹீம் ஹமா’ என்ற அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு சென்று சித்திரவதை*

*4 ஆம் பக்கம்*

## ஈரோடு மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# வர்ணாஸ்ரமம் உருவாக்கிய ஜாதி


***2012 டிசம்பர் 23, 24 ஆகிய இரு நாட்களில் ஈரோட்டில் நடைபெற்ற 'மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க' மாநாட்டின் பொது மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய நிறைவுரை:***

கடந்த ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளில் பரமகுடியில் சாதி ஒழிப்புப் போராளி இம்மானுவேல் சேகரன் நினைவிடத்தில் உறுதிமொழியேற்ற கழகத்தின் சாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயணம், அங்கிருந்து புறப்பட்டு மதுரையை அடைந்து, வழியில் மேலவளவு முருகேசன் நினைவிடம் சென்று, இறுதியாக செகுடந்தாளி முருகேசன் நினைவிடத்தில் பயணத்தை முடித்து அதன் நிறைவு விழாவை கடந்த ஏப்ரல் 29 ஆம் நாள் திருப்பூரில் மாநாடாக நடத்தினோம். தற்போது நடைபெறும் 'மனு சாஸ்திர எரிப்பு விளக்க' மாநாட்டின் நோக்கம்கூட அதன் தொடர்ச்சிதான்.

அந்த திருப்பூர் மாநாட்டில் பல்வேறு தீர்மானங்களை நாங்கள் இயற்றினோம். அந்தத் தீர்மானங்களைப் பற்றி சுருக்கமாக கூறு விரும்புகிறேன். "பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவர அரசு முயற்சித்தாலும், தாழ்த்தப்பட்டோர் வாழ்விடங்களைப் பொறுத்தவரை அவை ஊர் என்றும், சேரி என்றும் இன்னும் பிரிந்தே கிடக்கிறது. இதனை எதிர்த்து நீண்டகாலமாக பல்வேறு புரட்சியாளர்கள் குரல் எழுப்பி வந்திருக்கிறார்கள். குறிப்பாக, பெரியாரைப் பொறுத்தவரை 1926 ஆம் ஆண்டு காரைக்குடி அருகே உள்ள சிராவயல் என்ற ஊரில் காந்தி ஆசிரமத்தை நடத்தி வந்த தோழர் ஜீவா, ஒரு நிகழ்ச்சிக்கு பெரியாரை அழைக்கிறார். அது என்ன நிகழ்ச்சி என்றால், காந்தி வாசக சாலையைத் திறப்பது, காந்தி கிணறு ஆகியவற்றை திறந்து வைக்க பெரியாரை அழைத்தார். பெரியார் கேட்டார், "வாசக சாலை என்றால் சரி திறந்து வைக்கிறேன். அது என்ன காந்தி கிணறு?" என்றார். அது தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே பயன்படுத்தும் தனிக் கிணறு என்று சொன்னார்கள்.

அந்த நிகழ்ச்சியில் பெரியார் பேசினார், "நான் காங்கிரஸ் கட்சியில் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் இருந்திருக்கிறேன். (பெரியார் 6 ஆண்டுகள்தான் காங்கிரசில் இருந்தார். 3 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், 3 ஆண்டுகள் பொதுச் செயலாளராகவும் இருந்தார்) அப்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி "அரிஜன நல நிதியிலிருந்து தாழ்த்தப்பட்டோருக்கு தனிக்கோயில் கட்ட, தனிக் கிணறு வெட்ட ரூ.48,000 அனுப்பி வைத்தார்கள். (1920களில் அது மிகப் பெரிய தொகை) நான் அதைப் பயன்படுத்தாமல் அப்படியே திருப்பி அனுப்பினேன், ஒரு கடிதத்தோடு. பொதுக் கோயிலில் வழிபட, பொதுக் கிணற்றில் நீரெடுக்க அதற்குத்தான் காங்கிரஸ் போராட வேண்டுமே தவிர, தனியாகப் பிரித்து வைத்து, நிரந்தர வேலியை தீண்டப்படாதாருக்கும் பிறருக்கும் இடையில் நீங்கள் அமைத்துவிடக் கூடாது. ஊரையும், சேரியையும் பிரித்து வைக்கிற இந்தச் சதிக்கு நான் உடன்பட மாட்டேன் என்று திருப்பி அனுப்பினேன். இப்போதும் சொல்கிறேன், அருமைத் தோழர்களே! நீங்கள் தாகத்தால் வேண்டுமானாலும் செத்துப் போங்கள், தனிக் கிணற்றில் நீர் எடுக்காதீர்கள்; பொதுக் கிணற்றில் நீர் எடுக்கப் போராடுங்கள்" என்று பெரியார் சொன்னார். *(பலத்த கைதட்டல்)*

பின்னர் ஒரு முறை பெரியார் சொன்னார்: 'வாழ்விடங்களும் தனியாகக் கட்டுவதை நான் எதிர்க்கிறேன்' என்று. தன்னுடைய சொற்களைக் கேட்கும் என்று நினைத்த தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது ஒரு வேண்டுகோள் வைத்தார் பெரியார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதாக கலைஞர் அறிவித்தபோது மகிழ்ச்சியோடு வரவேற்றார் பெரியார், ஆனால் ஒரு நிபந்தனையோடு. 'உண்மையில் உங்களுக்கு அக்கறை இருக்குமானால், தாழ்த்தப்பட்



டோருக்குக் கட்டித் தருகிற தொகுப்பு வீடுகளை ஊருக்குள் இருக்கின்ற சிறிய இடமானாலும், அடுக்குமாடியாகக் கட்டுங்கள். காலியாக இருக்கின்ற கோயில் மைதானங்களில் குடியிருப்புகளைக் கட்டுங்கள். தனியே கட்டிக் கொடுப்பதாக இருந்தால் அவர்களுக்கு வீடே வேண்டாம்' என்று கோரிக்கை வைத்தார் பெரியார். *(பலத்த கை தட்டல்)* ஆனால், அது இன்று வரை நடக்கவில்லை. திருப்பூர் மாநாட்டில் நாங்கள் தீர்மானம் இயற்றினோம். 'இனி, தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டுகிற எந்தக் குடியிருப்பாக இருந்தாலும், அது ஊருக்குள் இருக்கிற பொது இடத்தில், சிறுஇடமாக இருந்தால் அடுக்குமாடியாகக் கட்ட வேண்டும்' என்று.

அதோடுகூட, மனை விற்கிறபோது வாங்குகிறவன் சொல்கிறான், 'இதில் எந்த ஒரு மனையையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விற்கவில்லை என்றால், நான் வாங்குகிறேன்' என்ற நிபந்தனைகள் பல இடங்களில் போடப்படுகின்றன. 'அரசே நிபந்தனையோடு ஏற்பிசைவு (அனுமதி) வழங்க வேண்டும். மனைகள் விற்க ஏற்பிசைவு வழங்குகிறபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதில் அவர்களின் மக்கள் தொகைக்கான - Proportionate to their Population - மனைகளை ஒதுக்கித் தர வேண்டும். அதைக் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு விற்கக் கூடாது; விற்க முடியாது என்ற நிபந்தனையோடு தரவேண்டும்' என்ற தீர்மானத்தை திருப்பூர் மாநாட்டில் நாங்கள் இயற்றினோம். 'ஜாதி மறுப்புத் திருமண இணையர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு ஜாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் முகமாக தனியான இடஒதுக்கீட்டைப் பிரித்துத் தரவேண்டும். *(கைதட்டல்)* தனியார் துறைகளிலும் இடஒதுக்கீடு வேண்டும். (அரசுத் துறைகள் வேகமாக அழிந்து தனியார் துறைகளாக மாறிக் கொண்டு வருவதால்) 'இடஒதுக்கீட்டைத் தவிர வேறு எந்த வடிவிலும் ஜாதியை, ஜாதிப் பெயரைப் பயன்படுத்தக் கூடாது. ஜாதியை அடையாளப்படுத்தும் ஊர்களின் பெயர்கள், தெருக்களின் பெயர்கள், வணிக நிறுவனங்கள், திருமண மண்டபங்கள் எதன் பெயரும் இருக்க அனுமதிக்கக்கூடாது' *(பலத்த கைதட்டல்)* - என்றும் தீர்மானம் போடப்பட்டது. அதேபோல, திருமணத்திற்குத் துணை தேடும் விளம்பரங்களில் போடுவார்கள். 'பார்ப்பனர்கள் மட்டும்', 'எஸ்.சி./எஸ்.டி. தவிர' என்ற விளம்பரங்கள் எல்லாம் பார்க்கலாம். முற்போக்காளர்கள் என்பவர்கள் விளம்பரம் கொடுப்பார்கள், 'எந்த ஜாதியும் சம்மதம் - எஸ்.சி./எஸ்.டி. தவிர' என்று. என்னய்யா ஜாதி மறுப்பு இது? 'இப்படிப்பட்ட விளம்பரங்கள் கொடுப்பவர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றினோம். *(பலத்த கைதட்டல்)*

திருமண மண்டபங்களை வாடகைக்குக் கேட்கிறபோதுகூட 'சைவர்களுக்கு மட்டும் அனுமதி' என்று சொல்லுவார்கள். சைவ உணவு சமையலுக்கு மட்டும் அங்கே அனுமதி உண்டு என்று சொல்லுவார்கள். வீடுகளை வாடகைக்கு விடுகிறபோதும் சைவர்களுக்கு மட்டும் அனுமதி என்று சொல்லுவார்கள். அதுவும் தீண்டாமையை வலியுறுத்தும் செயல்தான். அசைவ உணவு என்பது நம் உணவு. தமிழர் உணவு. இறைச்சியை, மாமிசத்தை, கறியைச் சாப்பிடுகிறவர்களை அவர்களையும் இரண்டாகப் பிரித்து வைத்துவிட்டோம். கறி உண்பதிலும் கோழிக் கறியையும், ஆட்டுக் கறியையும் உண்பவர்கள் ஒரு ஜாதி; மாட்டுக் கறி உண்பவர்கள் ஒரு ஜாதி. 'எனவே, இவர்களுக்கெல்லாம் திருமண மண்டபங்கள் கொடுக்கக்கூடாது என்ற முயற்சியை தடுக்கும் விதமாக, அரசு திருமண மண்டபங்களுக்கு அனுமதி வழங்கும்போது நிபந்தனைகளை அவர்களுக்கு விதிக்க வேண்டும்.' அம்பேத்கர் எழுதிய 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற நூலை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் துணைப் பாடமாக (Non-detailed) வைக்க வேண்டும். *(பலத்த கைதட்டல்)* என்பன போன்ற கோரிக்கைகளை திருப்பூர் மாநாட்டில் வைத்தபோது அன்று ஒரு செய்தியையும் சொன்னோம். உச்சநீதிமன்றத்தில் வழக்காடப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க வழக்கு லதா சிங் வழக்கு என்பது. ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டதற்காக நடந்த வன்முறையின் வெளிப்பாடாக வந்த வழக்கு அது. அதேபோல ஆறுமுகம் சேர்வை என்ற வழக்கும் ஒன்று உச்சநீதிமன்றம் வந்தது. இந்த வழக்கு ஜல்லிக்கட்டு பற்றியது. ஜல்லிக்கட்டு என்பதை வீர விளையாட்டு என்று சொல்வார்கள். அது தமிழர்களின் வீர விளையாட்டு அல்ல; கள்ளர் ஜாதியினரின் இடைநிலை ஜாதியினரின் வீர விளையாட்டாகத்தான் அதை வைத்திருக்கிறார்கள். பிற ஜாதியினர் அந்த விளையாட்டில் நுழைய முடியாது. குறிப்பிட்டுச் சொன்னால் தாழ்த்தப்பட்டவர்கள் பங்கேற்க முடியாது. அதில் பங்கேற்கப்போன தாழ்த்தப்பட்டவர்களையும் விலக்கி வைத்தார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுகளின் தொடர்ச்சியாக ஒரு வழக்கு உச்சநீதிமன்றம் சென்றது. மேற்சொன்ன இரண்டு வழக்குகளிலும் சேர்த்து தீர்ப்புச் சொன்னார்கள். அதில் தீர்ப்பு சொன்ன மார்க்கண்டேய கட்ஜூ அழுத்தமாக ஒரு செய்தியைச் சொன்னார். 'மிகக் கொடூரமான இரட்டைக் குவளை முறை தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறது' என்று உச்சநீதிமன்றத்திலிருந்துகொண்டு சொன்னார்.

ஆனால், இராமதாசின் அனைத்து சமுதாய கூட்டமைப்புச் சொல்கிறது, "தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதாம்! சமுதாயத் தலைவர்களின் முயற்சியால்" என்று தீர்மானம் போடுகிறார். ஆனால், மார்க்கண்டேய கட்ஜூ சொன்னார், 'தமிழ்நாட்டில் தீண்டாமை பரவலாக இருக்கிறது' என்று. ஏனென்றால், அவர் தமிழ்நாட்டில் தலைமை நீதிபதியாக இருந்தவர். இதைச் சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார், 'இப்படிப்பட்ட தீண்டாமை செயல்களும் அதன் அடிப்படையில் வன்முறைகளும் நிகழ்கின்றபோது உரிய நடவடிக்கை எடுக்க அரசுத் தரப்பில் தவறுவார்களேயானால், அந்த குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரையும் உடனடியாக இடைநீக்கம் செய்ய வேண்டும்; அவர்கள் மீது வழக்குத் தொடுக்க வேண்டும்; அவர்கள் மீது அவர்களின் துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" (Suspend, Prosecute and Proceed departmentally) என்ற மூன்றையும் மார்க்கண்டேய கட்ஜூ சொன்னார். அந்த வழக்கின் தீர்ப்பின்படி, தருமபுரியில் நிகழ்ந்த நிகழ்வுகளுக்காக மாவட்ட ஆட்சியரை, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை பணி இடைநீக்கம் செய்திருக்க வேண்டும். அவர்கள் இருவர் மீதும் வழக்கு பதிந்திருக்க வேண்டும், உச்சநீதி மன்றம் சொன்னபடி.

அதை குறிப்பிட்டுத்தான், அதையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் நாங்கள் சொன்னோம். 'ஜாதி ஒழிப்புத் துறை' என்று ஒரு துறை வையுங்கள். அந்தத் துறை இதையெல்லாம் கண்காணிக்கட்டும், ஆதரவு கொடுக்கட்டும் என்ற தீர்மானங்களை நிறைவேற்றியதோடு, இதைத் தொடர்ந்து பரப்புரை செய்வோம். பரப்புரையின் முடிவில் இதில் அரசு கவனம் செலுத்தவில்லையென்றால், ஒரு விரிவான விவாதத்தை எழுப்பும் நோக்கத்தோடும், ஜாதியத்திற்கு ஆணி வேரான மனு சாஸ்திரத்தைப் பற்றிய அதை ஒத்த பல்வேறு சாஸ்திரங்களைப் பற்றிய விவாதங்கள் தமிழ்நாட்டில் வரவேண்டும் என்பதற்காகவும், அது குறித்த புரிதலை தமிழ்

3 ஆம் பக்கம்

# வீட்டுமனை விற்பனையிலும் தீண்டாமை

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

சமுதாயத்தில் மீண்டும் உண்டாக்க வேண்டும் என்பதற்காகவும் 'மனு சாஸ்திரத்தை எரிப்போம்' என்று அறிவித்தோம்.

அந்த அறிவிப்பை நாங்கள் செய்தபோது நாங்கள் "பெரியார் திராவிடர் கழகமாக" இருந்தோம். இப்போது புதிய வடிவில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் மூலமாக இந்த முதல் மாநாட்டில் உங்களைச் சந்திக்கிறோம். நாங்கள் புது இயக்கமாக வடிவெடுத்த பின்னால், இதற்கான மாநாட்டை பெரியாரின் நினைவு நாளான இன்று மீண்டும் அதைப் புதுப்பித்து, 'ஒரு போராட்டமாக அறிவிக்க வேண்டும்' என்று இங்கே கூடியிருக் கிறோம்.

தோழர்களே! இப்போது பேச வேண்டிய செய்தியாக வந்துவிட்டது. 'ஜாதி மறுப்புத் திருமணங்கள்'. அவர்கள் பார்வையில் கலப்புத் திருமணங்கள். நேற்று இந்த மாநாட்டு மேடையில் மூன்று இணையர்களுக்கு ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடந்தன. அப்போது நான் பேசுகையில், "இவையெல்லாம் ஜாதி மறுப்புத் திருமணங்கள்தான்; கலப்புத் திருமணங்கள் அல்ல" என்று குறிப்பிட்டேன். கலப்புத் திருமணங்களை யார் செய்து கொண்டார்கள் என்றால், இந்த சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்ட ரிஷிகள் தான் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். கலப்புத் திருமணங்களுக்குப் பிறந்தவர்கள் அவர்கள். ரிஷிய ஷிருங்கர் என்ற ரிஷி, மானுக்குப் பிறந்தவர்; ஜம்புகர் என்ற ரிஷி, நரிக்குப் பிறந்தவர்; மாண்டவியர் என்ற ரிஷி, தவளைக்குப் பிறந்தவர்; காங்கேயர் என்ற ரிஷி கழுதைக்குப் பிறந்தவர்; சவுனகர் என்ற ரிஷி நாய்க்குப் பிறந்தவர்; ஜாம்புவந்தர் என்ற ரிஷி கரடிக்குப் பிறந்தவர் - இது 'மனுநீதி - ஒரு குலத்திற்கு ஒரு நீதி' என்ற நாங்கள் வெளியிட்ட புத்தகத்தில் இருக்கும் செய்திதான் இது. அப்படியானால், சாஸ்திரத்தில் குறிப்பிடப் பட்ட ரிஷிகள்தான் கலப்புத் திருமணத்தில் பிறந்தவர்கள். மானுக்கு, நரிக்கு, தவளைக்கு, கழுதைக்கு, நாய்க்கு, கரடிக்குப் பிறந்தவர்கள். நாம் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்கிறோம். கலப்புத் திருமணம் செய்யவில்லை.

சரி, மனு சாஸ்திரத்தைப் பற்றி பலர் பேசினர். அவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள்? நான்கு வர்ணங்களைப் பற்றிச் சொன்னார்கள். அய்ந்தாவது வர்ணத்தைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால், ரிக்வேதமானாலும், மனுசாஸ்திரமானா லும் அதில் தெளிவாகச் சொல்கிறார்கள், 'நான்கு வர்ணங்கள் தான் உண்டு, அய்ந்தாவதாக ஒரு வர்ணம் கிடையாது' என்று. ஆனால், எப்படி அய்ந்தாவது வர்ணம் வந்தது? பெரியார் சொல்வார், 'வல்லடி வம்பாக, தன்னுடைய கையடியால், வாயடியால் கொண்டு வந்து நிலைநிறுத்தச் செய்துவிட்டார்கள்' என்று. உண்மையில் அய்ந்தாவது வர்ணம் என்பதே இல்லை, அப்படி ஒரு பிரிவே இல்லை. பின் எப்படி ஆயிரக்கணக்கான ஜாதிகள் வந்தன? அதற்கும் மனுசாஸ்திரம்தான் விடை சொல்கிறது.

நான்கு வர்ணங்கள் மட்டுமே இருந்தன என்பதே உண்மை. சரி, அய்ந்தாவது வர்ணமும் இருக்கட்டும். ஆனால், வர்ணம் தாண்டி திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற தடையும் இருந்தது. அப்புறம் எப்படி இத்தனை ஜாதிகள் வந்தன என்றால், அதற்கும் விளக்கம் சொல்லப்படுகிறது, 'வர்ணம் மாறி நடக்கின்ற திருமணத்தில் பிறந்த வர்கள்தான் ஜாதிகளாகப் பிரிந்து போனார்கள். ஒவ்வொரு ஜாதியாகப் பிரிந்தார்கள். இருவேறு வர்ணங் களுக்குள் திருமணத்தால் பிறந்தவர்கள் இந்த ஜாதி; அதே வர்ணங்களுக்குள் விபச்சாரத் தால் பிறந்தவர்கள் இந்த ஜாதி" என்று அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. உயர் வர்ணத்து ஆண், கீழ் வர்ணத்துப் பெண் என்றால் ஒரு ஜாதி. கீழ் வர்ணத்து ஆண், உயர் வர்ணத்துப் பெண் என்றால் ஒரு ஜாதி. அதிலே ஒன்றைச் சொல்லுகிறான். 'சண்டாளன்' எனப்படுகிற தீண்டப்படாத ஜாதியாக ஒன்றை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சண்டாளரைப் பற்றி அம்பேத்கர் தன்னுடைய மனுசாஸ்திரம் பற்றிய ஆய்வில் ஒன்றை எழுதுகிறார். சண்டாளர் எனப்பட்ட ஜாதி மக்கள், பிராமணப் பெண்ணுக்கும், சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்த மக்கள். அம்பேத்கர் இடையில் ஒரு சொல்லை விட்டுவிட்டு எழுதுகிறார். உண்மையில் அவர்களுக்கு விபச்சாரத்தில் பிறந்தவர்கள் தான் சண்டாளர்கள். ஒரு பார்ப்பனப் பெண், ஒரு சூத்திர ஆணோடு விபச்சாரம் செய்தால் அதில் பிறப்பவர்கள் தான் சண்டாளர்கள் என்று சொன்னார்கள். "இதன்படி பார்க்கும்போது, சண்டாளர்கள் எண்ணற்றவர் களாக இருப்பதால், ஒவ்வொரு பிராமணப் பெண்ணும் ஒழுக்கம் கெட்டவளாக, பரத்தையாக இருந்திருக்க வேண்டும். *(பலத்த கைதட்டல்)* அதுபோல, ஒவ்வொரு சூத்திர ஆணும் சோரம் போனவனாக இருந்திருக்க வேண்டும்". அப்படித்தானே இருக்க முடியும்? இது அம்பேத்கர் சொல்வது. பெரியார் வேறொரு சாஸ்திரத்திற்குப் போய், யக்ஞ வல்யருக்குப் போய் இன்னும் ஒரு படி மேலே சென்று சொன்னார்.

அதில் அருந்ததியர்கள் பற்றிய குறிப்பும் வருகிறது. ஒரு பார்ப்பனப் பெண், சூத்திர ஆணோடு விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் சண்டாளர்கள். இந்த சண்டாள ஆண்களோடு மீண்டும் பார்ப்பனப் பெண்கள் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள்தான் சரும வேலைக் காரர்கள். தோல் வேலை செய்பவர்கள் எல்லாம் அப்படிப் பிறந்தவர்கள்தான் என்று சொன் னார்கள். இதற்கு பதிலாக பெரியார் அன்றைய காலகட்டத்தில் சொன்னார். 'தமிழ்நாட்டில் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள். அதில் 5 விழுக்காடு அருந்ததிய மக்கள். பார்ப்பனர்கள் 3 விழுக்காடு. அதில் ஒன்றரை விழுக்காடுதான் பெண்கள். அதிலும் குழந்தை பெறத்தக்க பார்ப்பனப் பெண்கள் முக்கால் விழுக்காடு மட்டுமே. முக்கால் விழுக்காடு பார்ப்பனப் பெண்கள் சண்டாளர்களோடு விபச்சாரம் செய்து 5 விழுக்காடு அருந்ததியர்கள் வந்திருப்பார்களே யானால், பார்ப்பனப் பெண்களுக்கு வேறு வேலையே இருந்திருக்காதா? இந்த வேலையாகத் தான் இருந்தார்களா?' என்று பெரியார் கேட்டார். *(பலத்த கைதட்டல்)* ஆக, இப்படிச் சொல்கிற வர்ணங்கள் கலந்து பிறந்த ஜாதிகள்தான் இன்று இருக்கிற ஜாதிகள். இந்த ஜாதிகள் கலந்து பிறப்பதை இந்த நவீன மனுவாதிகள் (அப்போது இருந்த மனுவாதிகள் வேறு, இப்போது இருக்கின்ற மனுவாதிகள் வேறு) ஏன் தடுக்கிறார்கள்? என்ன ஏற்பட்டது இவர்களுக்கு?- இப்போது நாங்கள் அதைப் பற்றி பேசிக் கொண்டு இருந்தோம். இந்த மனுவியவாதிகள் பார்ப்பனர்களின் சூழ்ச்சியாக சிலவற்றைச் செய்வார்கள். பேராசிரியர் மார்க்ஸ், அழகாகச் சொல்வார், 'வரலாற்றை எழுதுபவன், ஆரியர் வருகை என்று எழுதுவான்; இஸ்லாமியர் படையெடுப்பு' என்று எழுதுவான். இரண்டு பேரும் படையெடுத்து வந்தவர்கள் தானே? புரட்சியாளர் அம்பேத்கர் சொல்வார், 'இந்து இந்தியர் மீது முஸ்லிம்கள் படையெடுத்ததைப் போலத்தான் பவுத்த இந்தியா மீது ஆரியர்கள் படையெடுத்து வந்தார்கள்' என்று. அதன்படி, ஆரியர் படையெடுப்பு என்றும் இஸ்லாமியர் படையெடுப்பு என்றும் இரண்டையும் குறிப்பிட்டு இருக்க வேண்டும். ஆரியரை மட்டும் என்ன நாம் வரவேற்பு இதழ் வாசித்தா வரவேற்றோம்? இல்லையென்றால், ஆரியர் வருகை; இஸ்லாமியர் வருகை என்று எழுது. இந்த சொற்களுக்குள் நம் மனதிலே இஸ்லாமியர் மீதான வெறுப்பை விதைத்து விடுவார்கள். அப்படித்தான் சொன் னார்கள், 'காந்தியை யார் கொலை செய்தார்கள் என்றால், கோட்சே கொலை செய்தார்' என்பார்கள். ராஜீவ் காந்தியை யார் கொலை செய்தார்கள் என்றால், விடுதலைப் புலிகள் கொலை செய்தார்கள் என்பார்கள். ஒன்று, காந்தியை கொலை செய்தது, ஆர்.எஸ்.எஸ். என்று சொல்லிவிட்டு, ராஜீவ் காந்தியைக் கொன்றது விடுதலைப் புலிகள் என்று சொல்லு. இல்லையென்றால், ராஜீவ் காந்தியை கொன்றது தாணு என்று சொல்லி, காந்தியைக் கொன்றது கோட்சே என்று சொல்லு. அது என்ன காந்தியைக் கொன்றது கோட்சே என்ற தனி மனிதன். ராஜீவ் காந்தியை கொன்றது மட்டும் விடுதலைப் புலிகள் என்ற இயக்கமா? ஒரு இயக்கமே கொன்றதா ராஜீவ்காந்தியை? *(பலத்த கைதட்டல்)* இப்போது ராமதாஸ் சொல்கிறார், அவர்களின் தலித் அல்லாதோர் பேரவையில் குருவாம், மணி கண்டனாம் - என்று தனி நபர்களைச் சொல்கிறார். இப்படிப்பட்ட காதல் நாடகத் திருமணங்களை ஊக்குவிப்பவர்கள் யார் என்றால், விடுதலைச் சிறுத்தைகள் என்ற இயக்கம் என்கிறார். பழைய மனுவியவாதிகள் புலிகள் என்றார்கள். புதிய மனுவியவாதிகள் சிறுத்தைகள் என்கிறார்கள். *(பலத்த கைதட்டல்)* தனி மனிதனைக் குறிக்காமல் ஒரு இயக்கத்தை ஏன் கேவலப்படுத்துகிறீர்கள்? அப்ப, மனுவியம் உங்கள் மனதில் ஆழப் பதிந்துவிட்டது.

(தொடரும்)


## தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

**புதுச்சேரி சுயமரியாதை இயக்க இதழ் 'புதுவை முரசு' தொகுப்பு -**

தொகுப்பாசிரியர் : **வாலாசா வல்லவன்**

6 தொகுருக (10.1.1930 - 2.5.1932)

2496 பக்கங்க * விலை ரூ. 1200,-

புதுவை முரசில் புதுவை சிவப்பிரகாசம், சாமி சிதம்பரனார், ம. சிங்காரவேலர், மாயவரம் சி. நடராசன், நாகை என். பி. காளியப்பன்,செல்வி நீலாவதி, குஞ்சிதம், பூவாளூர் அ.பொன்னம்பலனார், எ .இராமநாதன், பட்டுக்கோட்டை அழகர்சாமி, கி. ஆ. பெ. விசுவநாதன், சித்தர்க்காடு இராமையா, சாத்தன் குளம் அ.இராகவன், நாகர்கோவில் பி. சிதம்பரம் பிள்ளை, காரைக்குடி சொ. முருகப்பா, ஊ. அ. பூ. சௌந்தரபாண்டியன் மற்றும் பலரின் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும்; இங்கர்சாலின் கடவுள், மதம் போன்ற தலைப்புகளிலான சொற்பொழிவுகளின் தமிழாக்கமும் வெளியிடப்பட்டுள்ளன. குருசாமியும், பாரதிதாசனும் போட்டி போட்டுக்கொண்டு சுயமரியாதை உணர்ச்சியைச் சூடேற்றும் வகையில் மிகவும் எழுச்சியான நடையில் எழுதிக் குவித்தனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | **முதல் 6 வரை புதுவை முரசு தொகுப்புகள்** | பக்கம் 2496 | ரூ.1200 |
| 7. | **பெரியாரும் பிற நாட்டு நாத்திக அறிஞர்களும்** – *ப.செங்குட்டுவன்* | பக்கம் 248 | ரூ.120 |
| 8. | **சுயமரியாதைச் சுடரொளி குஞ்சிதம் அம்மையார்** – *குருவிக்கரம்பை வேலு* | பக்கம் 208 | ரூ.100 |
| 9. | **உண்மை வரலாறு** – *எ .டி.விவேகி* | பக்கம் 208 | ரூ.100 |
| 10. | **தாசிகள் மோசவலை (அ) மதி பெற்ற மைனர்** – *மூவலூர் இராமாமிர்தம்* | பக்கம் 320 | ரூ.150 |
| 11. | **புரட்சியாளர் பெரியார்** – *டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு* | பக்கம் 288 | ரூ.125 |
| 12. | **வள்ளுவர் குறளும் ஈவெ.ரா. வாழ்க்கையும்** – *எம். சுவாமி* | பக்கம் 104 | ரூ.50 |
| 13. | **பெரியார் சாதித்ததுதான் என்ன?** – *தொகுப்பு : செந்தமிழ்க்கோ* | பக்கம் 192 | ரூ.100 |

**பணவிடை (M.O.), வங்கி வரைவோலை (D.D)**

'*தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்*' **(Thamiz Kudiarasu Pathippagam)**

4/11, சி.என்.கே. சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005,

**வாலாசா வல்லவன் கைப்பேசி : 9444321902, 7299214554**

DATE OF PUBLICATION 13.02.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# இந்தியாவில் இதுவே கடைசி தூக்காக இருக்கட்டும்

முதல் பக்கத் தொடர்ச்சி

செய்து, உதவி கண்காணிப்பாளர்களாக இருந்த வினய் குப்தா என்பவரும், தரீந்தர் சிங் என்பவரும் ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டனர். சரணடைந்த பிறகு திருமணம் செய்து கொண்டவர்தான் அப்சல்குரு. திருமணம் முடிந்த அடுத்த சில வாரங்களிலேயே இந்த சித்திரவதை நடந்தது. உடனே வீட்டிலிருந்த எல்லா உடைமைகளையும் விற்று, அந்த லஞ்சப் பணத்தைக் கொடுத்து, அப்சல் குருவை மீட்க வேண்டியிருந்தது என்று அப்சல்குருவின் மனைவி, கண்ணீருடன் விடுத்த அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

- மக்களிடமிருந்து இப்படி பணம் பறிக்கும் கொள்ளைக் கும்பலாக சிறப்புக் காவல் படை செயல்படுவது காஷ்மீர் முழுவதற்குமே தெரியும். இதை காஷ்மீர் மாநிலத்தின் முக்கிய கட்சியான முப்தி முகம்மது சயீத் அவர்களின் கட்சி, தனது தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டு, இந்தப் படையை முழுமையாக கலைத்து விடுவதாக மக்களுக்கு வாக்குறுதியாக அறிவித்தது, பாதுகாப்புப் படை அவமானப்பட்டு நின்றது.

- காஷ்மீரில் சரணடைந்த பிறகு எல்லைப் பாதுகாப்புப் படையின் சித்திரவதைகளை சந்திக்க முடியாத அப்சல்குரு, டெல்லிக்கு குடிபெயர திட்டமிட்டு டெல்லிக்கு வந்தபோதுதான் அவர் மீது 'நாடாளுமன்ற தாக்குதல் சதி' சுமத்தப்பட்டது. அப்போது மருத்துவ சிகிச்சைக்கான கருவிகளை வாங்கி, விற்கும் தொழிலைச் செய்து கொண்டிருந்தார் அப்சல்குரு.

- ஒரு வழக்கறிஞர் வைத்துக்கூட வாதாடும் வசதியற்றவராக அப்சல்குரு இருந்தார். 'தேசபக்தி', 'பயங்கரவாதம்' என்று கட்டமைக்கப்பட்ட உணர்வுகளுக்கு எதிராக அப்சல்குருவுக்காக வாதாட வழக்கறிஞர்கள் எவரும் முன்வரவில்லை. சிறப்பு நீதிமன்றத்தில் தன் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லும் வாய்ப்புகள் முழுமையாக அப்சல் குருவுக்கு மறுக்கப்பட்டது. கண்துடைப்புக்காக சிறப்பு நீதிமன்றம் 'இந்துத்துவா' உணர்வுள்ள ஒருவரையே சட்ட ஆலோசகராக அப்சல் குருவுக்காக நியமித்தது. அவர் சிறையிலிருக்கும் அப்சல்குருவை ஒருமுறைகூட சந்திக்கவில்லை. அப்சல்குருவுக்கு எதிராக சாட்சி சொன்னவர்களை குறுக்கு விசாரணை செய்யவும் இல்லை. அப்சல்குரு மீதே அவர் வெறுப்பைக் கக்கினார். வழக்கை விசாரித்த நீதிபதி திங்ரா என்பவரிடம் அப்சல்குருவே இதை முறையிட்டார். நீதிபதி கண்டு கொள்ளவே இல்லை.

- அப்சல்குருவுக்கு தூக்குத்தண்டனை அறிவிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது, அப்சல்குருவுக்காக வாதாட ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். ஆனால், அப்சல் குருவுக்காக வாதாட வந்தவர் நீதிமன்றத்தில் கூறிய கருத்துதான் ஆச்சரியமானது. 'அப்சல்குரு தனக்கு கழுத்தில் தூக்குப் போட விரும்பவில்லை. விஷ ஊசி மூலம் சாகடிக்கப்படவே விரும்புகிறார்" என்று கூறினார். தனக்கு எதிராக தனக்காக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர், இப்படி ஒரு விபரீத கருத்தைக் கூறினார் என்ற உண்மைகூட அப்சல்குருவுக்கு, உயர்நீதிமன்றம் தூக்குத் தண்டனையை உறுதி செய்த பிறகுதான் தெரிய வந்தது.

- நாடாளுமன்றத் தாக்குதலுக்கு அப்சல்குரு திட்டமிட்டார் என்பதற்கு எந்த ஒரு நேரடி சாட்சியமும் இல்லை. தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்ட முகம்மது என்பவரிடம் தாக்குதலுக்கு முன்பு அப்சல்குரு செல்பேசியில் பேசினார் என்பதுதான், காவல்துறை முன்வைத்த சாட்சியம். கைப்பற்றப்பட்ட லேப்டாப் கருவி உடனே சீல்வைக்கப்படவில்லை. அதன் வழியாக எடுக்கப்பட்ட சில 'பிரிண்ட் அவுட்டு'கள் சாட்சியாக முன் வைக்கப்பட்டன. கொல்லப்பட்டவர் செல்பேசி எண்ணை அவரது சட்டைப் பைக்குள்ளே வைத்திருந்தார் என்றது புலனாய்வுத் துறை. அவருடன் பேசியது அப்சல்குரு எண் தான் என்பதற்கு ஒரே ஆதாரம் அப்சல்குருவிடமிருந்து சித்திரவதை செய்து பெறப்பட்ட அவரது ஒப்புதல் வாக்குமூலம்தான். இப்படி குற்றம்சாட்டப்பட்டவரையே அவருக்கு எதிரான சாட்சியாக மாற்றி குற்றம்சாட்டப்பட்ட மனிதருக்கு சட்ட உதவிகளை மறுத்து, ஒரு மனிதனின் உயிர் 'காவு' தரப்பட்டுள்ளது!

- இந்த வழக்கை புலனாய்வு செய்த தலைமை அதிகாரி, ராஜ்பீர்சிங் ஊழல் புகாரில் சிக்கி பதவி நீக்கம் செய்யப்பட்டார். புலனாய்வு செய்த மற்றொரு முக்கிய ஊழல் அதிகாரி லஞ்சப் புகாரில் சிக்கி கைது செய்யப்பட்டார்.

- அப்சல்குரு தூக்கிலிடப் போகிறார் என்ற செய்தி முறைப்படி அவரது குடும்பத்துக்குக்கூட தெரிவிக்கப்படவில்லை. தொலைக்காட்சி வழியாகவே இந்த செய்தியை அறிந்து கொண்டதாக அவரது மனைவி கூறியுள்ளார்.

- தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகாலத்துக்கும் மேலாக அது நிறைவேற்றப்படாமல் இருந்தாலே தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து, உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது. ஜியான்சிங் எதிர் பஞ்சாப் அரசு, டி.வி. வேதீஸ்வரன் எதிர் தமிழ்நாடு வழக்கு, தயாசிங் எதிர் இந்திய அரசு வழக்கு ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும். அப்சல்குரு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு 8 ஆண்டுகாலத்துக்குப் பிறகு இப்போது தூக்கிலிடப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரானதாகும். இதே அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் பேரறிவாளன் தொடர்ந்த வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. இந்த தீர்ப்பு வருவதற்கு முன்பே பா.ஜ.க. பயன்படுத்தி வந்த 'அரசியல் துருப்புச் சீட்டை'ப் பறித்து, அரசியலில் வாயடைக்கச் செய்யும் அற்ப தேர்தல் அரசியல் நலனுக்காக இந்த தூக்குத் தண்டனையை நடத்தி முடித்துள்ளது, காங்கிரஸ் ஆட்சி. மிக மோசமான தரமற்ற சட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி அப்பாவி ஒருவரை தூக்கிலிட்ட இந்த நிகழ்வு உலகநாடுகளின் பார்வையில் இந்தியாவை மிகவும் கீழ்நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியிலேயே மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வந்தார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் செயலாளராக இருந்த பிரவீன்தாவார் நடத்திய கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகை 'சுப்ரீம் சேவியர்' குடியரசுத் தலைவர் அப்சல்குருவுக்கு கருணை காட்ட வேண்டும்; உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை ஏற்கக் கூடாது என்று எழுதியது.

காஷ்மீரில் தீவிரவாதிகள் ஜனநாயகவாதிகள் அனைவரும் ஒரே குரலாக அப்சல்குருவின் தூக்குத் தண்டனையை எதிர்த்தனர். பார்ப்பன தேசம் நினைத்ததை முடித்துவிட்டது. இந்தியாவின் கடைசி தூக்காக இதுவே இருக்க வேண்டும்; இதை உறுதிப்படுத்த மனித உரிமையாளர்கள், மதச் சார்பற்றவர்கள், சமூகநீதியாளர்கள் களமிறங்கிப் போராட தயாராக வேண்டும்.

**– விடுதலை இராசேந்திரன்**

(அப்சல்குரு தூக்கிலிடப்பட்ட அன்று பிற்பகல் 2 மணிக்கு "புதிய தலைமுறை" தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்று முன் வைத்த கருத்துக்கள்)

# இலங்கை வங்கி தாக்குதல்: கழகத் தோழர்கள் 6 பேர் கைது: சிறையிலடைக்கப்பட்டனர்



ராஜபக்சே வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை எழும்பூரிலுள்ள பாங்க் ஆப் சிலோன் வங்கி தாக்கப்பட்டது தொடர்பாக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தோழர்கள் தாமரைக் கண்ணன், கன்னியப்பன், அசோக்குமார், சம்பத், ஜான்சன், பாஸ்கர் ஆகியோரை வங்கிக்கு அழைத்துச் சென்று காவல்துறை அடையாள அணி வகுப்பை நடத்தியது. பிறகு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வழக்கறிஞர் ரஜினி, அருள், திருமூர்த்தி ஆகியோர் தோழர்களுக்காக நேர் நின்றனர். இந்திய தண்டனைச் சட்டம்பிரிவு 324, 3(1) பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் பிரிவு 147 (கலவரம் செய்தல்), 148 (அத்துமீறி கூடுதல்), 506 (2) குற்றஞ்செய்யும் நோக்கத்தோடு அச்சுறுத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**தோழர்களே!**
**'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு உறுப்பினர்களை சேர்க்கும் பணியை தீவிரப்படுத்துங்கள்!**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th February 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 21, 2013 | புரட்சி 12 | முழக்கம் 6 | விலை: ரூ.3.00

## ‘ஜாதியற்ற பிரிவி’னருக்கு தனி ஒதுக்கீடு வழங்குக!

# சேலம், திண்டுக்கல்லில் கழகத்தின் எழுச்சி மாநாடுகள்!

*ஜாதி மறுப்பு திருமணம் புரிந்தோர் வாரிசுகளை ‘ஜாதியற்றோர்’ என்ற புதிய பட்டியலில் இணைத்து தனி இடஒதுக்கீடு வழங்கிட வேண்டும் என்று கழக மாநாடுகளில் வலியுறுத்தப்பட்டது.*

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் “தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு” பிப்.16 ஆம் தேதி சேலத்திலும், பிப். 18 ஆம் தேதி திண்டுக்கல்லிலும் எழுச்சியுடன் நடைபெற்றது. ஏற்கனவே சென்னையில் பிப்.3 ஆம் தேதி மாநாடு நடந்து முடிந்துள்ளது. தொடர்ந்து 23 ஆம் தேதி திருவாரூரில் ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு நிகழ இருக்கிறது.

### சேலத்தில்

பிப்.16 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் விஜயராகவாச்சாரி அரங்கில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்கியது. தோழர் ஜஸ்டின் வரவேற்புரை யாற்றினார். சமூக சமத்துவத்துக்கான மருத்துவர் சங்க பொதுச் செயலாளர் மருத்துவர் ரவீந்திரநாத் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அவர் தனது உரையில், தமிழ் நாட்டில் தர்மபுரி வன்முறை மற்றும் ஜாதிய சக்திகளின் அணி திரட்டல் நடக்கும் கால கட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் இத்தகைய ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளை பல்வேறு பகுதிகளில் நடத்தி வருவதைப் பாராட்டினார். காதலர் தினம், கலாச்சார சீரழிவு என்று பேசி வருவோருக்கு தமிழ் இலக்கியங்களிலேயே காதல் போற்றப்பட்டிருப்பதையும், குறிப்பாக சிலப்பதிகாரத்தில் இந்திர விழா, காதலர்களின் மகிழ்ச்சிக் கூடலாகவே சித்தரிக்கப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினார். 21 வயதுக்கு முன் நடக்கும் காதல் திருமணங்களை நாடகத் திருமணம் என்று குறை கூறும் மருத்துவர் ராமதாசின் வாதத்தை மறுத்த டாக்டர் ரவீந்திரநாத், ஜாதி மறுப்பு காதல் திருமணம் 24-25 வயதுக்கிடையேதான் பெருமளவில் நடப்பதாக ஆய்வுகள் கூறுவதை சுட்டிக் காட்டினார். சாதி மறுப்பு திருமணம் செய்தோரை ஜாதியற்றோர் என்ற புதிய பட்டியலில் இணைத்து அவர்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் தனி இட ஒதுக்கீடுகள் வழங்க வேண்டும் என்ற மாநாட்டின் தீர்மானத்தை பாராட்டி வரவேற்ற அவர், ஒரு சோஷலிச சமுதாயத்தை உருவாக்க பார்ப்பனியப் புராணம், இதிகாசப் புரட்டுகளுக்கு எதிராக பண்பாட்டுத் தளத்தில் போராட வேண்டிய அவசியமிருப்பதை சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து ஜாதி மறுப்புத் திருமண இணையரின் கருத்தரங்கம் நடைபெற்றது. ஜாதி கலைந்தோர் சங்கத் தலைவர் முகில்வண்ணன் தலைமை தாங்கினார். காதல் இயற்கையானது என்று கூறிய அவர், இல்லாத சுதந்திரத்துக்கும், குடியரசு தினத்துக்கும் விழா எடுக்கும்போது இயற்கையான காதலுக்கு விழா எடுப்பதில் என்ன தவறு என்று கேட்டார். கருத்தரங்கில் சேலம் மாலதி, மகாலட்சுமி, புதுடில்லி தமிழரசு ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து “ஜாதி ஒழிப்போம்; சமத்துவம் படைப்போம்” எனும் தலைப்பில் பெண்கள்-திருநங்கை பங்கேற்ற கவியரங்கம் நிகழ்ந்தது. ஊடகவியலாளர் சிறிதேவி தலைமையில், சக்தி அருளானந்தம், தமிழ் மதி, சரண்யா (திருநங்கை), கோமதி, எம்.சிவகாமி, ஜெ. மேரி, ஏஞ்சலாமெர்சி ஆகியோர் எழுச்சியான கவிதைகளை அரங்கேற்றினர். சுமார் 30 நிமிட மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மேட்டூர் கருப்பரசன் கலைக் குழுவினர் நடத்திய நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

தொடர்ந்து மனு சாஸ்திரத்தில் விஞ்சி நிற்பது, “ஜாதியமா? பெண்ணடிமையா” எனும் தலைப்பில் கருத்துச் செறிவான பட்டிமன்றம் நடந்தது. கழக பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் நடுவர் பொறுப்பையேற்றார். “ஜாதியமே” என்ற அணியில் வழக்குரைஞர் நீலவேந்தன் (ஆதித் தமிழர் பேரவை), பெரியார் பிஞ்சு மேட்டூர் அறிவுமதி, நங்கவள்ளி அன்பு ஆகியோரும்; “பெண்ணடிமையே” என்ற அணியில் திருச்சி புதியவன், பெரியார் பிஞ்சு ஈரோடு மதுமிதா, கோகுலக் கண்ணன் ஆகியோரும் வாதிட்டனர். “விஞ்சி நிற்பது ஜாதியமே” என்று நடுவர் தீர்ப்பளித்தார். சேலம் மாநகரக் கழகத் தலைவர் மூ.வெ. சரவணன் நன்றி கூற, நிகழ்ச்சி மாலை 5 மணி அளவில் நிறைவடைந்தது.




மாநாட்டில் பங்கேற்ற ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட இணையர்கள்

மாலை 7 மணியளவில் - சேலம் கோட்டை மைதானத்தில் “தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு பொது மாநாடு”, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தொடங்கியது. தொடக்கத்தில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. சேலம் மண்டல அமைப்புச் செயலாளர் அ.சக்திவேல் வரவேற்புரையாற்றினார். கிருட்டிணகிரி மாவட்ட கழகத் தலைவர் தி.குமார், தர்மபுரி மாவட்ட கழக அமைப்பாளர் வெ.வேணுகோபால், விடுதலை சிறுத்தைகள் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் இரா.நாவரசு, வழக்குரைஞர் நீலவேந்தன் (ஆதித் தமிழர் பேரவை), வழக்குரைஞர் தோழியர் கரூர் வி.ஆர்த்தி, டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். இரவு 10.30 மணியளவில் த. பரமேசு குமார் நன்றி கூற,

4 ஆம் பக்கம்

## சேலம் மாநாட்டிலிருந்து....

- சேலம் சிந்தாமணியூரைச் சேர்ந்த கழகத் தோழர் ஜெயப் பிரகாசு, தனது இணையர் திலகவதியுடன் இணைந்து சேலம் கழக மாநாட்டு மேடையில் கழக வளர்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ஒரு லட்சம் நன்கொடை வழங்கினார்.
- சேலம் நகர கழகத் தோழர் பழனி-சந்திரா இணையரின் பெண் குழந்தைக்கு கொளத்தூர் மணி ‘மணியம்மை’ என்று பெயர் சூட்டினார். உலகத்தில் ஒரு நாத்திக இயக்கத்துக்கு தலைமையேற்று வழி நடத்திய பெருமைக்குரிய அன்னை மணியம்மையாரை கொச்சைப்படுத்தும் ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ ஏட்டுக்கு மேடையில் கண்டனத்தையும் பதிவு செய்தார்.
- மேட்டூர் காவலாண்டியூர் கழகத் தோழர் ஈசுவரன், பிற்படுத்தப்பட்டோர் குடியிருப்பு பகுதியில் தலித் குடியிருப்பை உருவாக்க தனக்கு சொந்தமான 1000 சதுர அடி குடியிருப்பு மனைக்கான உரிமையை கழகத்திடம் ஒப்படைத்தார். சேலம் மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் இதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கியபோது கூடியிருந்த மக்கள் பெரும் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.
- சேலம் தாதகாப்பட்டி கேட் பகுதியில் ஜாதி தீண்டாமை ஒழிப்பு பொது மாநாட்டுக்கான அனுமதி கோரி கடந்த ஜனவரியிலேயே கழக சார்பில் முறையான அனுமதி கோரப்பட்டது. ஆனால் சேலம் மாநகர காவல்துறை எந்த பதிலையும் வழங்காமல் மாநாடு இறுதி நேரம் வரை அமைதி காத்திருந்தது. கடைசி நேரத்தில் அனுமதியை ரத்து செய்தால் மாநாட்டை நடக்கவிடாமல் தடுத்து விடலாம் என்று திட்டமிட்டிருந்தனர் போலும். இதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் காவல்துறை எந்த பதிலையும் தராததை சுட்டிக்காட்டி கழக சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. கழக வழக்கறிஞர் துரை. அருண் மற்றும் வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் மனுதாக்கல் செய்தனர். நீதிமன்றத்தில் வழக்கு மனு தாக்கல் செய்திருந்த நிலையில் மாநாடு நடத்த அனுமதி மறுத்து சேலம் காவல்துறை கடிதம் அனுப்பியது. நீதிமன்றத்தில் மனு விசாரணையில் இருக்கும்போது காவல்துறை அதை கவனத்தில் கொள்ளாமல் அனுமதி மறுத்ததை கழக வழக்கறிஞர்கள் நீதிபதி எஸ். இராஜேசுவரன் அவர்களிடம் சுட்டிக்காட்டி வாதிட்டனர். மாநாட்டை நடத்த காவல்துறை ஏதேனும் ஒரு பகுதியில் அனுமதி வழங்க வேண்டும் என்று நீதிபதி ஆணையிட்டதோடு நீதிமன்றத்தை மதிக்காது செயல்பட்ட காவல் துறை ஆய்வாளரையும், தனது உத்தரவில் குறிப்பிட்டு கண்டனம் செய்துள்ளார். சேலம் மாநாட்டில் திரண்டிருந்த மக்களிடம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நீதிபதியின் இந்த ஆணையையும் கண்டனப் பதிவையும் எடுத்துரைத்து, காவல்துறையின் கருத்துரிமைக்கு எதிரான போக்கைக் கண்டித்தார்.

**– நமது செய்தியாளர்**

## ஈரோடு மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# ஜாதித் தலைவர்கள்-அனைவருக்கும் பிரதிநிதிகள் அல்ல!

*2012 டிசம்பர் 23, 24 ஆகிய இரு நாட்களில் ஈரோட்டில் நடைபெற்ற 'மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க' மாநாட்டின் பொது மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய நிறைவுரை: (சென்ற இதழ் தொடர்ச்சி)*

தருமபுரி வன்முறையைப் பற்றிச் சொன்னால், அது தாக்குதல். ஊடகங்கள் எழுதுவதைப்போல, சொல்வதைப்போல அது கலவரம் அல்ல; மோதல் அல்ல. இரண்டு ஜாதிகளும் மோதிக் கொண்டால்தான் கலவரம். ஒரு ஜாதிக்காரன் மட்டும் போய் அடித்தால் தாக்குதல்தானே அது? ஊடகங்களில் எழுதுவதில்கூட சூட்சமம் இருக்கிறது. அய்ரோப்பிய நாடாளுமன்றம் கூடுகிறது. அவர்கள் தீர்மானம் போடுகிறார்கள். தருமபுரியில் நடந்த இந்த அட்டூழியங்களைப் பற்றி. அதற்காக ஜாதி வன்கொடுமை தடுப்புச் சட்டங்களை இன்னும் சரியாக பயன்படுத்த வேண்டும் என்று. இங்கு நடப்பதைப் பற்றி அங்குள்ளவர்களுக்குத் தெரிகின்றது. இங்கு இருக்கிறவர்களுக்குத் தெரியவில்லை. தெரியவில்லை என்றால், இவர்கள்தான் தெரியாததைப்போல நாடகம் ஆடுகிறார்கள்.

அது இருக்கட்டும் தோழர்களே! அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிப் பேசுவோம். இந்த மாநாட்டுக்கு யார் யாரையெல்லாம் அழைக்க வேண்டும் என்று நாங்கள் கருதியபோது, எங்கள் மனதில் சிலர்தான் பட்டார்கள். ஓரிருவர்தான் தென்பட்டார்கள். தேடினோம். பாவரங்கத்துக்கு - எங்களுக்கு அறிந்த கவிஞர்கள் ஏராளம் உண்டு. ஆனால், தமிழ், தமிழன், வீரம் எல்லாம் பேசுவார்கள். மனுசாஸ்திரத்தை எதிர்த்து கவிதை எழுத வேண்டும் என்றால், எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. தேடித் தேடி பார்த்து ஒரு 5, 6 கவிஞர்கள்தான் எங்கள் கண்களுக்குப் பட்டார்கள். அதுபோலத்தான், இந்த மனுசாஸ்திர எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்ற வேண்டும் என்று கருதி நாங்கள் பல தலைவர்களை கண்ணாடி கொண்டு, பூதக்கண்ணாடி கொண்டு தேடினோம். தொடக்க உரையாற்ற எங்களுக்கு ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் அதியமான் தான் கண்களுக்குப் பட்டார். நிறைவுரையாற்ற தொல். திருமாவளவன், எங்களுக்கு கண்களுக்குப் பட்டார். உள்ளத்திலிருந்து செய்தியை பேசுவதற்கு. அதற்குத்தான் தீண்டாமை ஒழிப்பு முன்னணி சம்பத்தை அழைத்தோம். நமக்கு அரிதாகப் போய் விட்டார்கள். எனவே, அரிதாக இயக்கம் எடுப்பவர்களாக நாம் இருக்கிறோம். ஆயிரம் பேருக்கு சிந்தனை மனதில் உண்டு. வெளியே வந்து போராடுவதற்குக் குறைவான பேர்கள்தான் இருக்கிறோம்.

நாங்கள் திருமண மண்டபத்தைப் பற்றித் தீர்மானம் போட்டபோது எங்கள் நினைவுக்கு ஒரு நிகழ்ச்சி வந்தது. நம்பியூரில் அப்படி ஒரு நிகழ்வு நடந்தது. அருந்ததியர் ஒருவருக்கு ஒரு திருமண மண்டபத்தை, அவர் வீட்டு நிகழ்ச்சிக்குக் கொடுக்க மாட்டோம் என்ற மறுத்துவிட்டனர். அந்த செய்திக்கு அவசரப்பட்டு நாங்களும் ஒரு போராட்டத்தை நடத்திவிட்டோம். ஆதித் தமிழர் பேரவையும் நடத்தியது. அப்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், போராட்டம் நடத்துவதாக செய்தி வந்தவுடன், நான் தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டேன். எப்போது அவருடன் தொடர்பு கொண்டேன் என்றால், தோழர்களே, அதற்கு முதல்நாள் ஆதிக்க சாதிகள் அனைவரும் அணி திரண்டு போய் அங்குள்ள கோட்டாட்சியரிடம் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தைத் தவறாக பயன்படுத்துகிறார்கள் என்றார்கள். நாயை முதுகில் அடித்தாலும் காலை தூக்கிக் கொண்டுதான் ஓடும். தலையில் அடித்தாலும் காலை தூக்கிக் கொண்டுதான் ஓடும். அதுபோல இவர்களுக்கு எதை எடுத்தாலும் தீண்டாமை வன்கொடுமை தடுப்புச் சட்டம்தான். (ஆரவாரம், பலத்த கைதட்டல்) எந்தக் கல்லை விட்டாலும் தீண்டாமை வன்கொடுமைச் சட்டம்தான். அதுபோல், அப்போதும் அதையேதான் சொன்னார்கள். மனு கொடுக்கப் போகும்போது யார், யார் இருந்தார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். காங்கிரசில் சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். அ.தி.மு.க.வின் முன்னாள்



நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தார். பா.ம.க.வின் மாவட்டச் செயலாளர் இருந்தார். தே.மு.தி.க.. மாவட்டச் செயலாளர் இருந்தார். எல்லோரும் சேர்ந்துதான் மனு கொடுக்கப் போனார்கள். தி.மு.க. காரர் வீட்டுத் திருமணத்திற்கு அ.தி.மு.க.காரர் போய்விட்டால் கட்சியை விட்டு நீக்கி விடுவார்கள். தெரிந்தும் இணைந்து போனார்கள். அவ்வளவு ஜாதிய உணர்வு அவர்களுக்கு இருக்கிறது. தோழர்களே! நாமும் அப்படி இருக்கக் கூடாதா? இருக்க வேண்டாமா? நீங்கள் நாளை நம்பியூருக்குப் போகாதீர்கள். நாம் அனைவரும் கோவையில் அமர்ந்து பேசுவோம் என்று திருமாவிடம் சொன்னேன். அதேபோல், தோழர் கிருஷ்ணசாமியை அழைத்தோம். தோழர் அதியமானை அழைத்தோம். 'ஜாதி ஒழிப்புக் கூட்டியக்கம்' என்று ஒன்றைக் கட்டினோம். அதன் பெயரால் ஆர்ப்பாட்டம் திருமாவளவன் தலைமையில் நடந்தது. டாக்டர் கிருஷ்ணசாமி வந்திருந்தார். 3500 பேருக்கு மேல் திரண்டு நடத்திய ஆர்ப்பாட்டம் அது. உடனே மாவட்ட ஆட்சியர் தலையிட்டு உங்கள் இல்ல நிகழ்ச்சியை நடத்துங்கள் என்று அருந்ததியத் தோழரை அழைத்து மண்டபத்தைக் கொடுத்தார். காது குத்தும் நிகழ்ச்சிக்காகத்தான் மண்டபம் கேட்டார் அவர். அதற்குள் காது குத்தியாகி விட்டது. பரவாயில்லை. தோழர் தனது மனைவிக்கு வளைகாப்பு நடத்தினார். அது நடத்தப்பட்டது. ஏதாவது ஒரு நிகழ்ச்சியை அங்கே நடத்த வேண்டும். மண்டபத்தைக் கொடுத்துவிட்டனர். அதை நாம் எடுத்தாக வேண்டும்.

எனவே, இப்போதும் அதைத்தான் கருதுகிறோம். நம்மைப்போல முன்னெடுத்துச் செல்ல வேண்டிய இயக்கங்கள் ஒன்றாக இணைந்து இந்தச் சிக்கலை தீர்த்தாக வேண்டும். நாம் கோரிக்கை வைத்துக் கொண்டே இருப்போம். வன்னியர் ஜாதியைச் சார்ந்த முற்போக்காளர்கள் பலபேர் இருக்கிறார்கள். வெள்ளாளக் கவுண்டர்களில் பல பேர் முற்போக்காளர்கள் இருக்கிறார்கள். எல்லா ஜாதிகளிலும் முற்போக்காளர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் குரலெழுப்பச் சொல்வோம். வன்னியர்களுக்கு ராமதாஸ் ஒன்றும் பிரதிநிதியல்ல. அப்படி இருந்திருந்தால் சட்டமன்றத் தேர்தலில் ஏன் வெற்றிப் பெறாமல் போனார்கள். தென்னாற்காட்டிலாவது வென்றிருக்க வேண்டும் அல்லவா? (கைதட்டல்) இவர்கள் பிரதிநிதித்துவத்தின் யோக்கியதை அப்போதே தெரிந்துவிட்டது. 81 விழுக்காடுக்கு எங்கே போவது? இருக்கின்ற 15, 20 விழுக்காடில் 8, 9 விழுக்காடு வன்னியர்கள்கூட உங்களுக்கு ஆதரவாக இல்லை. அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ராமதாசை நோக்கிக் குரலெழுப்ப வேண்டும். நீ யார் எங்களைப் பற்றி பேசுவதற்கு என்று? நீ எங்களுடைய ஒட்டு மொத்தப் பிரதிநிதி அல்ல. நாங்கள் உங்கள் கருத்தை எதிர்க்கின்றோம் என்று வன்னிய இளைஞர்கள், வன்னிய முற்போக்காளர்கள் பேச வேண்டும். நீ யார்யா கவுண்டர் பேரவை? இப்ப திடீர் தலைவர். நிலம் கொஞ்சம் விற்றாராம். காசு வந்ததாம். உடனே தலைவர், எப்படியோ இருக்கட்டும். குரலெழுப்ப வேண்டும். நீ யார் பேசுவதற்கு? நீ ஏகப்பிரதிநிதி அல்ல, இந்த சமுதாயத்திற்கு. நாங்கள் உங்கள் கருத்தை ஏற்க மாட்டோம். இப்படி ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ள முற்போக்காளர்கள் அறிக்கையாகவோ கூட்டமாகவோ தங்கள் கருத்தை உடனடியாக வெளிப்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது. எல்லோரும் குரலெழுப்புவோம், அவர்கள் எங்கள் பிரதிநிதி அல்ல என்று.

எனவே, இப்படிப்பட்ட சூழலில்தான்

4 ஆம் பக்கம்


**தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்**

புதுச்சேரி சுயமரியாதை இயக்க இதழ் 'புதுவை முரசு' தொகுப்பு -

தொகுப்பாசிரியர் : **வாலாசா வல்லவன்**

6 தொகுதிகள் (10.1.1930 - 2.5.1932)

2496 பக்கங்கள் * விலை ரூ. 1200/-

**அருள்பாரதி பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–1 (உலக மதங்கள், புரட்சி செய்த பேனா வீரர்கள், உலகைத் திருத்திய உத்தமர்கள்) | பக்கம் 224 | ரூ. 100 |
| 2. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–2 (விஷக் கோப்பை, சாக்ரடீஸ் வரலாறு, சாய்ந்த கோபுரம், மாஜினி வரலாறு) | பக்கம் 176 | ரூ. 80 |
| 3. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–3 (மார்டீன் லூதர், புத்தர், கொலம்பஸ் வரலாறுகள்) | பக். 192 | ரூ. 80 |
| 4. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–4 (எமிலி ஜோலா பாகம் 1, 2) | பக்கம் 160 | ரூ.80 |
| 5. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–5 (ஆபிரகாம் லிங்கன், பிளாரன்ஸ் நைட்டிங்கேல், சிந்தனைச் சுடர்) | பக்கம் 176 | ரூ.80 |
| 6. | சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு படைப்புகள் தொகுதி–6 (துங்க விலங்கு நாடகம், சீன வரலாறு) | பக்கம் 160 | ரூ. 80 |
| 7. | அறிஞர் பார்வையில் பௌத்தம் –தி. *இராசகோபாலன்* | பக்கம் 256 | ரூ. 120 |
| 8. | இறைமாட்சி (அ) அரசியல் – *இலட்சுமிரதன் பாரதி* (திருக்குறள் அரசியல் ஆய்வு) | பக்கம் 208 | ரூ. 100 |
| 9. | ஆதிதிராவிடர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்–*திரிமென்னீர், ஆல்காட், ஆபா டூபே, எட்கர் தர்ஸ்டன்* | பக்கம் 208 | ரூ. 100 |
| 10. | ஆதிதிராவிடர் வரலாறு – *ஆ.பெருமாள் பிள்ளை* (முதல்பதிப்பு 1922 – சான்று ஆதாரங்களைக் கொண்டது) | பக்கம் 104 | ரூ. 50 |
| 11. | பிராம்மணனும் சூத்திரனும் (அ) பரிகாரம்–*பம்மல். சம்மந்த முதலியார்* | பக்கம் 184 | ரூ. 80 |
| 12. | எம்.சி ராசா வாழ்க்கை வரலாறும், எழுத்தும் பேச்சும் – *ஜெ.சிவசண்முகம்பிள்ளை* | பக்கம் 128 | ரூ. 60 |
| 13. | கீதைக் காட்டும் பாதை–*நாராநாச்சியப்பன்* | பக்கம் 120 | ரூ. 60 |
| 14. | குருகுலப் போராட்டம்–*நாராநாச்சியப்பன்* (டாக்டர் வரதராசலு நாயுடுவின் கண்டனம் இணைக்கப்பட்டுள்ளது) | பக்கம் 88 | ரூ. 40 |

**27 நூல்களின் மொத்த விலை ரூ.3055/-**

பணவிடை (M.O.), வங்கி வரைவோலை (D.D)

'தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்' (Thamiz Kudiarasu Pathippagam)

4/11, சி.என்.கே. சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005,

வாலாசா வல்லவன் கைப்பேசி : 9444321902, 7299214554

# இந்தியப் பார்ப்பன ஆட்சியின் அடுத்த 'கொலைக்களம்'!

***தோழர்கள் சைமன், மாதையன், பிலவேந்திரன், ஞானப்பிரகாசம் ஆகியோர் தூக்குத் தண்டனை உச்சநீதிமன்றத்தில் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் நிறுத்தப்பட்டுள்ளது. சட்டம் வழங்கும் முறையான உரிமைகளை வழங்க மறுத்து, அப்சல்குருவை ரகசியமாக அவசர அவசரமாக தூக்கிலேற்றி மகிழ்ச்சிக் கூத்தாடிய "தேசபக்தர்களின்" 'இருட்டு சதி' இப்போது தடுக்கப்பட்டிருக்கிறது என்பது மனித உரிமையாளர்களுக்கும் மனித நேயம் மிக்கவர்களுக்கும் ஆறுதல் தருவதாகும், "வீரப்பன் கூட்டாளிகள்", "அதிரடிப் படை சென்ற வேனுக்கு கண்ணிவெடி வைத்து 22 பேரைக் கொன்றவர்கள்" – என்று இவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள்.***

*உண்மையில் இந்தக் குற்றத்தை இழைத்தவர்கள் இவர்கள்தானா? இந்த வழக்கின் பின்னணி என்ன? இந்த உண்மைகள் மக்களுக்கு விளக்கப்பட வேண்டும்.*

- *கருநாடக எல்லைப் பகுதியான பாலாறு அருகே கண்ணி வெடி தாக்குதல் நடந்தது. 1993 ஆம் ஆண்டு அந்தத் தாக்குதலில் அதிரடிப்படையினர் மற்றும் வனத்துறை அதிகாரி 22 பேர் பலியானார்கள். அதிரடிப்படை அதிகாரியான கோபாலகிருட்டிணன் உள்ளிட்டோர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர்.*
- *குற்றம் செய்தவர்களாக 3 பெயர்கள் மட்டும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு, மற்றும் 10 பேர் என்று பதியப்பட்டிருந்தது. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கையோ 163. இதில் 124 பேர் மீது 'தடா' சட்டம் ஏவப்பட்டது. இவர்களில் 12 பேர் பெண்கள். இவர்கள் கருநாடக சிறையில் ஆண்டுக்கணக்கில் விசாரணையில்லாமல் அடைக்கப்பட்டார்கள். 7 ஆண்டுகள் வரை இவர்கள் மீதான குற்றத்தை விசாரிக்க சிறப்பு நீதிமன்றமே அமைக்கப்படவில்லை. இவர்களை சிறையில் வந்து சந்திக்கவோ உதவிடவோ முடியாத நிலையிலேயே பெரும்பாலோரின் குடும்பங்கள் வசதியற்றவர்களாக இருந்தனர்.*
- *இவர்கள் மீதான குற்றச்சாட்டை விசாரிக்க நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பதற்கே மனித உரிமை அமைப்புகள் போராட்டங்கள் நடத்த வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் 7 ஆண்டுகள் கழித்து 'தடா' விசாரணை நீதிமன்றமே அமைக்கப்பட்டது.*
- *'தடா' சட்டப்படி கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வெளியே வர முடியாது. விசாரணையில் இவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி துன்புறுத்தி வாங்கப்பட்ட வாக்குமூலத்தை அப்படியே நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்க முடியும். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தான் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும்.*
- *இந்த வழக்குகளை விசாரித்த கருநாடக 'தடா' சிறப்பு நீதிமன்ற நீதிபதி டி.சி. கிருஷ்ணப்பா, 14 பேர் மட்டுமே குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து, 12 பெண்கள் உட்பட 109 பேரை விடுதலை செய்தார். எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட காரணத்தால் 8 ஆண்டு 6 மாதம் சிறையில் கழிக்க வேண்டியிருந்தது. இதனால் இவர்களின் குடும்பங்கள் மிக மோசமான துன்பங்களை சந்திக்க வேண்டியிருந்தது. வழக்கறிஞர்கள் வைத்துக்கூட வாதாட முடியாத நிலையில் இருந்தனர்.*
- *கைதான 124 பேரில் 2 பேர் வசதிப் படைத்தவர்கள் என்பதால் தங்களுக்காக ராம்ஜெத் மாலனி, ஜி. இராமசாமி போன்ற புகழ் பெற்ற வழக்கறிஞர்களை நியமித்துக் கொண்டு விடுதலை பெற்று விட்டனர். எஞ்சிய 120 பேருக்கும் 4 வழக்கறிஞர்கள் மட்டுமே வாதாட வேண்டியிருந்தது. அதாவது 30 பேருக்கு ஒரே ஒரு வழக்கறிஞர் என்ற நிலை. எனவே ஒவ்வொருவரின் மீதான குற்றப் பத்திரிகையை படித்து முறையாக வாதாடக் கூடிய வாய்ப்புகள் இல்லாமலே போய்விட்டது.*
- *ஆனாலும்கூட வழக்கை விசாரித்தவர் நேர்மையான நீதிபதி என்று கருநாடகத்தில் பேசப்பட்டவர். 'இது அரிதிலும் அரிதான வழக்கு' என்பதை நீதிபதி ஒப்புக் கொண்டார். அதாவது தூக்குத் தண்டனை வழங்கக்கூடிய வழக்கு என்பதை ஒப்புக் கொண்டார். ஆனாலும், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளையெல்லாம் நேரில் பார்த்து, வழக்கு விசாரணையை முழுமையாக உணர்ந்தவர் என்ற அடிப்படையில் சில கருத்துகளை முன் வைத்தார். இங்கே குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள், வீரப்பனால் மிரட்டப்பட்டு, வேறு வழியின்றி கட்டாயத்தால் வீரப்பனுக்கு உதவி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்று கூறிய நீதிபதி, இவர்களிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் பற்றிக் குறிப்பிடும் போது, இந்த வாக்குமூலங்களை இந்த மக்கள் இப்படித்தான் கூறியிருப்பார்கள் என்பதை என்னால் ஏற்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு வாக்குமூலம் 125 பேரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்று தீர்ப்பில் குறிப்பிட்டார். எனவே இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கக்கூடிய அளவுக்கு சான்றாதாரங்கள் இல்லை (I don't find adequate materials for awarding death penalities) என்று தெளிவாகவே தீர்ப்பில் எழுதினார்.*
- *தடா நீதிமன்றத்தில் ஏற்கனவே தண்டனை காலத்தை முடித்தவர்கள் நீங்கலாக 7 பேருக்கு மட்டும் தண்டனை வழங்கப்பட்டது. மற்ற அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதில் பாலாறு குண்டு வெடிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட நான்கு பேருக்கும் அந்த வழக்குக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.*
- *'தடா' சிறப்பு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் உரிய கால அவகாசத்துக்குள் மேல் முறையீடு செய்யப்படாமல் காலம் தாழ்த்தி மேல் முறையீடு செய்யப்பட்டதால் உச்சநீதிமன்றம் அரசு மேல்முறையீட்டை தள்ளுபடி செய்துவிட்டது. இந்த நிலையில் பாலாறு குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரும் தங்களின் ஆயுள் தண்டனையை நீக்கக் கோரியும் உண்மையில் தாங்கள் நிரபராதி என்றும் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். உச்சநீதிமன்றம் இவர்களின் மனுவை விசாரணைக்கு ஏற்று 3 பேரை விடுவித்தது. ஆனால், 4 பேரின் ஆயுள் தண்டனையை அரசு சார்பில் கோரிக்கை இல்லாமலே தானாகவே தூக்குத் தண்டனையாக உயர்த்திவிட்டது உச்சநீதிமன்றம்!*
- *உண்மையில் பாலாறு குண்டு வெடிப்பில் கண்ணி வெடிகளை புதைத்து வைத்தது, இப்போது தூக்குத் தண்டனையிலுள்ள நால்வர் தான் என்பதற்கு ஒரே ஒரு சாட்சியம்தான். அதாவது, விபத்தில் உயிர் தப்பிய அதிகாரி கோபாலகிருட்டிணனால் அடையாளம் காட்டப்பட்டதுதான் ஒரே சாட்சியம்.*
- *கண்ணிவெடியை புதைத்து வைத்தவர்கள் அது வெடிக்கும் இடத்திலேயே நின்று கொண்டிருக்கவும் மாட்டார்கள். கண்ணிவெடி வெடித்து புகைமண்டலம் சூழ்ந்து நிற்கும் போது மனிதர்களை அடையாளம் காணவும் முடியாது. அதிகாரி கோபாலகிருட்டிணன் படுகாயமடைந்து, அதற்குப் பிறகு பல மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட கடுமையான விபத்தை எதிர்கொண்டவர், கண்ணி வெடி வெடித்த போது அதை வைத்தவர்கள் இவர்கள்தான் என்று அடையாளம் காட்டியதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதுதான் 'அதிசயம்'.*
- *உண்மையில் வழக்கு விசாரணை நடக்கும் போது குற்றம்சாட்டப்பட்ட 124 பேரில் யாராவது சிலரை முக்கிய குற்றவாளியாக அடையாளம் காட்ட வேண்டும் என்பதற்காக அந்த அதிகாரியால் தேர்வு செய்யப்பட்டவர்கள்தான் இப்போது தூக்கில் நிறுத்தப்பட்டுள்ளவர்கள்.*
- *வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அதிரடிப் படை - அப்பாவி மக்களை பிடித்து முகாமில் அடைத்து, ஒவ்வொரு நாளும் சித்திரவதை செய்வதும் பெண்களை பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்குவதும் ஆண்டுக் கணக்கில் தொடர்ந்தது. மனித உரிமை அமைப்புகள் கண்டனக் குரலை எழுப்பின. அதிரடிப் படை அத்துமீறல் செய்ததா என்பதை விசாரிக்க கருநாடக உயர்நீதிமன்ற நீதிபதி சதாசிவம் தலைமையில் ஒரு விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.*
- *நீதிபதி சதாசிவம் ஆணையம் அதிரடிப்படை சித்திரவதை செய்தது உண்மைதான் என்று அறிவித்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, நிவாரணம் வழங்கிட உத்தரவிட்டது. அது மட்டுமல்ல, வேறு அதிர்ச்சியான தகவல்களும் வெளி வந்தன.*
- *விசாரணைக்காக பிடித்து வைத்த பொது மக்களில், அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் மட்டும் 65 பேர். இவர்கள் முகாமிலிருந்து தப்பி ஓட முயலும் போது 'என்கவுண்டரில்' சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று அதிரடிப் படை சாதித்தது. ஆனால், நீதிபதி சதாசிவம் ஏற்கவில்லை. இந்த 65 பேருக்கும் ஒரே மாதிரியாக நெற்றிப் பொட்டிலும், நெஞ்சிலும் குண்டுக் காயங்கள் இருந்ததை சுட்டிக் காட்டினார். அதிலும் 5 பேர் ஒரு மீட்டர் தூரத்தில் நேருக்கு நேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதை தடயவியல் சோதனை அறிக்கைகளைக் காட்டி அம்பலப்படுத்தினார். இப்படி 65 பேரை சுட்டுக் கொன்ற அதிரடிப் படையினரை அடையாளம் கண்டு, அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது ஆணையத்தின் பரிந்துரை. ஆனால் இதுவரை அப்படி எந்த ஒரு விசாரணையும் நடத்தப்படவில்லை. இந்த "65 மரண தண்டனை"களை அப்பாவி மக்களுக்கு வழங்கிய அதிரடிப்படையினருக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு, இலவச வீடு என்று 'சன்மானம்' வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள். 60 பேர் கடுமையான சித்திரவதைக்குள்ளாகியதையும் நீதிபதி சதாசிவம் ஆணையம் உறுதி செய்தது.*
- *தற்போது தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் ஞானப் பிரகாசம், உண்மையில் கருநாடக எல்லையிலுள்ள 'தோகையர் பாளையம்' என்ற சர்ச்சில் வைத்து கைது செய்யப்பட்டார். ஆனால், அவர் காட்டில் அலைந்து திரிந்தபோது கைது செய்ததாக பொய்யாக குற்றப்பத்திரிகையில் அதிரடிப் படை கூறியது. முறையான வழக்கறிஞர் இருந்திருந்தால் இந்த உண்மையை நீதிமன்றத்தில் எடுத்துக்காட்டி, வழக்கிலிருந்தே அவர் விடுதலையாகியிருப்பார். அந்த சர்ச்சில் அருள் தந்தையாக இருந்த வின்சென்ட் டிசோசர் கண் முன்னால் கைது செய்யப்பட்டவர் ஞானப் பிரகாசம். ஆனால், காட்டில் கைது செய்யப்பட்டதாக பொய்யாக வழக்கு தொடரப்பட்டது என்ற உண்மை, ஞானப் பிரகாசத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிறகுதான் தெரிய வந்தது. அந்த உண்மை தெரிந்த பிறகு, தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாடு ஒன்றில் பேசிய அருள் தந்தை, "தோகையர்பாளயம் சர்ச்சில் தான் ஞானப் பிரகாசம் கைது செய்யப்பட்டார்" என்ற உண்மையை எந்த நீதிமன்றத்திலும் சாட்சி கூறுவதற்குதான் தயாராக இருப்பதாக அறிவித்தார். ஆனால், மறுக்கப்பட்ட நீதியின் முன் அந்த உண்மையின் குரல் கேட்கப்படாமலே போய் விட்டது.*

*65 அப்பாவி ஏழை மக்களுக்கு நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறாமலே "மரண தண்டனை" விதித்துவிட்டு, இந்த பார்ப்பனிய அரசு, இப்போது மேலும் 4 அப்பாவித் தமிழர்களை தூக்கில் ஏற்றியே தீருவோம் என்று கொக்கரிக்கிறது.*

*குற்றம்சாட்டப்பட்ட மாதையனின் குடும்ப உறுப்பினர்கள் இரண்டு பேர், ஏற்கனவே அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இப்போது மாதையனையும் தூக்கில் ஏற்றப் போகிறார்களாம். குற்றம்சாட்டப்பட்ட ஞானப் பிரகாசம், வீரப்பனை நேரிலே பார்க்காதவர். தன்னை சிறையில் சந்திக்க வந்தவர்களிடம், தான் விடுதலைப் பெற்றவுடன் முதலில் வீரப்பனை போய் நேரில் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தி வந்தவர்.*

*தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு 9 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது குடியரசுத் தலைவராக 'சிம்மாசனம்' ஏறியிருக்கும் பார்ப்பனர் பிரணாப் முகர்ஜி இவர்களின் கருணை மனுக்களை தள்ளுபடி செய்துள்ளார்.*

*ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையை பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் பலி பீடங்களில் 'காணிக்கை'யாக்கும் இந்தியப் பார்ப்பனிய ஆட்சி இப்போது வரிசை வரிசையாக தூக்குக் கொட்டடிக்கு குற்றவாளிகளை வழியனுப்பி வைக்கத் துடிக்கிறது. இதுதான் பார்ப்பன மனுதர்ம நீதி!*

**– இரா.**


DATE OF PUBLICATION 21.02.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# வீதி நாடகம் - இசை நிகழ்ச்சிகளுடன் மாநாடு களை கட்டியது



சேலம் மாநாட்டில்...



சேலத்தில் பெண்கள் கவியரங்கம்




திண்டுக்கல் மாநாட்டில்

மாநாடு நிறைவடைந்தது. தாதகாப்பட்டி கேட் அருகே மாநாடு நடத்த காவல்துறை அனுமதி மறுத்தத்தைத் தொடர்ந்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மாநாடு நடத்த அனுமதிப் பெற்று கோட்டை மைதானப் பகுதியில் மாநாடு நடந்தது குறிப்பிடத்தக்கது.

### திண்டுக்கல்லில்

பிப்.18 ஆம் தேதி மாலை 6 மணியளவில் திண்டுக்கல் மணிக்கூண்டு அருகில் மேட்டூர் டி.கே. ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சி மேட்டூர் கருப்பரசன் குழுவினர் வீதி நாடகங்களோடு மதுரை மண்டல அமைப்புச் செயலாளர் இராவணன் தலைமையில் மாநாடு தொடங்கியது. திண்டுக்கல் மாவட்ட கழகத் தலைவர் நா. நல்லத்தம்பி தொடக்கவுரை யாற்றினார். தலித் போராளிகள் முன்னணி நிறுவனர் சூ.ச. மனோகரன், விடுதலை சிறுத்தைகளின் உழவர் பெருமன்ற மாநில செயலாளர் வேலுச்சாமி, த.மு.மு.க. நகர தலைவர் ஜமால் முகம்மது, பழ. நீல வேந்தன் (ஆதித் தமிழர் பேரவை), தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் சின்ன கருப்பன், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

ஜாதி மறுப்பு திருமண இணையரின் வாரிசுகளுக்கு ஜாதியற்றோர் தனி ஒதுக்கீடு; தலித் மக்களுக்கான வீடுகளை தனியாக ஒதுக்காமல், பிற ஜாதியினர் வாழும் வீதிகளிலேயே கட்டித் தருதல்; ஜாதிப் பெயர்களில் இயங்கும் வணிக நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்க தடை செய்தல் ஆகிய கோரிக்கைகள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டன. அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்.14 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தவிருக்கும் மனுசாஸ்திர எரிப்புக் கிளர்ச்சி யில் வாய்ப்புள்ளவர்கள் பங்கேற்கவும், போராட்டத்தில் பங்கேற்க வாய்ப் பில்லாதவர்கள், இந்தப் போராட்டத்தின் நியாயங்களை மக்களிடம் எடுத்துரைக்கவும் முன்வரவேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார்.

**– நமது செய்தியாளர்**

# ‘காதலர் தினம்’ – இந்து மக்கள் கட்சிக்கு எதிராக கழகத்தினர் எதிர் போராட்டம்

காதலர் தினத்தன்று சென்னை மெரினா கடற்கரையில் காதலர்களுக்கு கட்டாய தாலி கட்டி வைக்கப் போவதாக இந்து மக்கள் கட்சியினர் ‘தாலி’களுடன் கூடி காதலர் தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது கழகத் தோழர்கள் மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் திரண்டு நின்று, இந்து மக்கள் கட்சியினருக்கு எதிராக நேருக்கு நேராக முழக்கமிட்டனர். கழகத் தோழர்களுக்கு ஆதரவு தெரிவித்து கல்லூரி மாணவர்களும் திரண்டனர். காவல்துறையினர் இந்து மக்கள் கட்சியினரை கைது செய்தனர்.

## கழகப் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் தந்தை முடிவெய்தினார்

திராவிடர் விடுதலைக் கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தூத்துக்குடி மாநகரக் கழகச் செயலாளர் பால். அறிவழகன் ஆகியோரது தந்தையும், தூத்துக்குடி 30வது வட்ட தி.மு.க. முன்னாள் கிளைச் செயலாளரும், பெரியார் பெருந்தொண்டருமான குமாரசாமி என்கின்ற பால்ராசு, கடந்த 4.2.2013 அன்று காலை 6 மணியளவில் முடிவெய்தினார்.

மாலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தின் முன் வீரவணக்க நிகழ்வு நடந்தது. கழக மாவட்டத் தலைவர் பொறிஞர் அம்புரோசு, திராவிடர் கழகப் பெரியாரடியான், இந்திய பொதுவுடைமை கட்சியின் மோகன்ராசு, ஆதித் தமிழர் பேரவை மனோகரன், புரட்சிகர இளைஞர் முன்னணி தமிழரசன், கழக நெல்லை மண்டல செயலாளர் குமார் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். 5 மணியளவில் எந்தவிதமான மூடச்சடங்குகளுமின்றி உடல் எரியூட்டப்பட்டது.

## நன்கொடை

மேட்டூர் அணை சீனிவாசன்-வசந்தா இணையரின் மகள் மது மித்ரா பிறந்த நாள் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

மேட்டூர் செக்கானூர் முனுசாமி-கலா தம்பதியினர் சுயமரி யாதைத் திருமணத்தின் மகிழ்வாக ரூ.3000 நன்கொடை வழங்கினர். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்-ஆர்.)

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர்
குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

தோழர்களே! நான் அதிகம் பேசிக் கொண்டிருக்கவில்லை. நான் அப்போதே, நீங்கள் 10 மணிக்கு முன்பாக உங்கள் பேச்சை முடித்துவிடவேண்டும் என்று தோழர் திருமாவளவனிடம் கேட்டுக் கொண்டேன். இப்போது நேரம் பத்தை நெருங்குகிறது. எனவே தோழர்களே! இந்த மனுசாஸ்திரத்தை எரிக்கவேண்டும் என்று நாம் மட்டும் முடிவு செய்யவில்லை. நம் முன்னோர்களும் சொல்லி விட்டார்கள். நமக்கு ஆகாதவன்கூட மனசாஸ்திர எதிர்ப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறான். பாரதியை நமக்கு அவ்வளவாக பிடிக்காது. ஏனெனில், எப்போதும் அவனிடம் வர்ணாசிரமம் ஒட்டிக் கொண்டிருக்கும். ‘ஆரிய நாடெங்கள் நாடு’ என்றுதான் அவன் பாடுவான்.

‘ஆரியர் இருமிண்! வீரியம் மிக்க ஆரியர் இங்கு இருமிண்’ என்பான். நமக்கெல்லாம் வீரியம் இல்லை. இருந்தாலும் அந்த பாரதி சொன்னார், ‘சூத்திரனுக்கு ஒரு நீதி! தண்டச்சோறுண்ணும் பார்ப்பானுக்கு ஒரு நீதி!’ என்று சாத்திரம் சொல்லிடுமாயின், அது சாத்திரம் அல்ல. சதியென்று கண்டோம்’ என்றார். இது மனு சாஸ்திரமெல்லாம் சதிடா’ என்றார் பாரதி. மனோன்மணியம் எழுதிய சுந்தரனார் சொன்னார், ‘வள்ளுவர் செய் திருக்குறளை, மருவற நன்குணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி, ஒரு குலத்துக்கொரு நீதி’ என்றார்.

(தொடரும்)

**தோழர்களே!**
**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு உறுப்பினர்களை சேர்க்கும் பணியை தீவிரப்படுத்துங்கள்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd February 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பிப்ரவரி 28, 2013 | புரட்சி 12 | முழக்கம் 7 | விலை: ரூ.3.00

## ஜாதி எதிர்ப்பு இயக்கம் எழுச்சிப் பெறுகிறது

# திருவாரூரில் கழகத்தின் 5 ஆவது மாநாடு

*ஜாதி – தீண்டாமைக்கு எதிரான இயக்கம் எழுச்சிப் பெற்று வருகிறது. திருவாரூரில் கழகத்தின் சார்பில் 5 ஆவது மண்டல மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றது.*

'எரியட்டும் மனுசாஸ்திரம்' என்ற முழக்கத்துடன் "தமிழர் ஒற்றுமைக்கான" ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 23.2.2013 சனி மாலை 6 மணி யளவில் திருவாரூர் கீழ வீதியில் சாதி ஒழிப்புப் போராளி மணல் மேடு வெள்ளைச்சாமி நினை வரங்கத்தில் கருத்துச் செறிவோடு நடைபெற்றது. புதுச்சேரி தலித் சுப்பையா குழுவினர் இசை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கியது. 7.30 மணி வரை ஒன்றரை மணி நேரம் தலித் சுப்பையா குழுவினர் சாழி ஒழிப்பு மற்றும் பெரியார், அம்பேத்கர், புலே - சமுதாயப் புரட்சிகளை விளக்கும் எழுச்சிப் பாடல்களை பாடினர். கழகத்தின் திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா. காளிதாசு வரவேற்புரையாற்றினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருவாரூர் வடக்கு மாவட்ட செயலாளர் கோ.வி. தமிழழகன், தெற்கு மாவட்ட செயலாளர் என்.டி. இடிமுரசு, திராவிடர் விடுதலைக்கழக பேச்சாளர் ஜீவா, தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான ஆர்.நல்லக்கண்ணு மாநாட்டில் சிறப்புரை யாற்றினார்.

அவர் தனது உரையில், "தமிழ்நாட்டில் ஜாதியத்துக்கு எதிராகவும், சமூக நீதிக்காகவும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தபோது, தமிழ்நாட்டில் போராடி, அரசியல் சட்டத்தை முதன்முதலாக திருத்தம் செய்து, இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற்றுத் தந்தவர் பெரியார். கேரளாவின் வைக்கத் திலே தீண்டப்படாதவர்கள், பார்ப்பனர் வாழும் வீதிகளிலே நடப்பதற்கு தடை செய்யப்பட்ட போது, இங்கிருந்து வைக்கம் சென்று போராடி, உரிமைகளை மீட்டுத் தந்தவர் பெரியார். பொது வுடைமை இயக்கத் தோழர் பா.இராமமூர்த்தியும் அப்போராட்டத்தில் பெரியாருடன் பங்கேற்றார். தீண்டாமை சட்டப்படி ஒழிக்கப்பட்டுள்ளது. அது கடைபிடிப்பது குற்றமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தலித் அல்லாதவர்கள் சாதியக் கூட்டணியை பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசு உருவாக்கியிருப்பது, சட்டத்துக்கு எதிரான செயல்பாடு. பெரியார் இயக்கம் சுயமரியாதை இயக்கம். இந்த நாட்டில் உருவாக்கியுள்ள சமுதாய மாற்றங்களை தொடர்ந்து வேகமாக மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கடமை நமக்கெல்லாம் உண்டு. இதை பின்னோக்கி இழுத்துச் சென்று சமுதாயத்தில் ஜாதியின் பெயரால் வெறியையும் பிளவுகளையும் உருவாக்க முயல்வது மிகவும் ஆபத்தானது" என்றார் தோழர் நல்லக்கண்ணு. தொடர்ந்து பேசுகையில், தமிழ் இலக்கியங்களிலே காதல் திருமணம் ஆதரிக்கப்பட் டுள்ளதை சுட்டிக்காட்டினார். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று சமூக ஒற்றுமையை வலியுறுத்திய நமது சங்க இலக்கியம்,




*மாநாட்டு மேடையில் ஜாதி ஒழிப்புத் திருமணம்*

4 ஆம் பக்கம்

# மணமேடையாகும் கழக மாநாட்டு மேடைகள்

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி வரும் ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளில் ஜாதி-மத மறுப்பு திருமணங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஈரோட்டில் 2012 டிசம்பர் 23, 24 தேதிகளில் நடந்த மாநில மாநாட்டு மேடையில் மூன்று இணையர்களின் ஜாதி-மத மறுப்பு மண விழாக்கள் நடந்தன. சென்னையில் நடந்த கழக மாநாட்டில் ஓர் இணையர் மத மறுப்பு திருமணம் செய்து கொண்டனர். அதே போன்று திருவாரூரில் நடந்த மாநாட்டில் மேடையில் ஓர் இணையருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஜாதி மறுப்புத் திருமணத்தை நடத்தி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் பாப்பம்பட்டியைச் சார்ந்த காளிமுத்து-முத்துலட்சுமி ஆகியோரது மகன் தமிழரசன் - திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டம் குளத்துப்பாளையம் ஆறுமுகம்-லட்சுமி ஆகியோரது மகள் மாயா என்கின்ற சுகன்யா ஆகியோர் வாழ்க்கைத் துணையேற்பு உறுதி மொழிகளைக் கூறி மாலைகளை மாற்றிக் கொண்டனர். கூடியிருந்த மக்கள் பலத்த கரவொலி எழுப்பி, மணமக்களை வாழ்த்தினர்.

## கறம்பக்குடி தோழர்கள் 24 பேர் கழகத்தில் இணைந்தனர்

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியைச் சார்ந்த 24 தோழர்கள் திருவாரூர் மாநாட்டு மேடையில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். வெ.பாவண்ணன் (திரைப்பட இயக்குனர்), பூ. கார்த்திகேயன், முருகராசு, இராசேசு, அ.சஞ்சய்காந்தி, வே. முருகேசன், ப.பாக்கியராசு, சு.ஆனந்தன், இரா.ஆனந்த பிரபு, பெ.பாக்கியராசு, ஞா. இங்கர்சால், த.மயில்வாகனன், செ.சுரேசு, வே.பிரபாகரன், ரா. சுதந்திரவாசன், சிலம்பரசன், திருப்பதி, இ.இராசவர்மன், கார்த்தி, குணசேகரன், ச. பரமேசுவரன், தவச்செல்வம், ராஜீவ் காந்தி, பாண்டியன் ஆகியோர் கழகத்தில் இணைந்த தோழர்கள்.

இதில் 5 பேர் பொறியாளர்கள். 8 பேர் பட்டம் - பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்கள்.

இணைந்த தோழர்களின் சார்பில் கவிஞரும், திரைப்பட இயக்குனருமான வெ.பாவண்ணன் பேசுகையில், "பெரியாரின் சமுதாயப் புரட்சி சிந்தனைகளை சரியாக முன்னெடுத்துவரும் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இன்று முதல் இணைந்து இந்த இயக்கத்தின் செயற்பாட்டாளர்களாக எங்களை அர்ப்பணிக்கிறோம். ஜாதியற்ற தமிழர் சமுதாயத்தை உருவாக்கவும், தமிழர் விடுதலைக்கும் பெரியார் காட்டிய கொள்கை வழியில் நாங்கள் செயல்பட உறுதி ஏற்கிறோம்" என்று பலத்த கரவொலிக்கிடையே சூளுரைத்தார். இணைந்த 24 தோழர்களில் 11 பேர் மாநாட்டுக்கு வந்திருந்தனர்.



# மனம் திறக்கிறார் நீதிபதி கே.டி. தாமஸ்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு 22 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு தூக்குத் தண்டனையை எதிர் நோக்கியிருக்கும் மூன்று தமிழர்கள் பிரச்சினையில் தூக்குத் தண்டனை விதித்த முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி. தாமஸ் இப்போது மனம் திறந்து பேசியிருக்கிறார். ஏற்கனவே தூக்குத் தண்டனையே வேண்டாம் என்ற கருத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறார். இப்போது இந்த 3 தமிழர்களுக்கும் தூக்குத் தண்டனை வழங்கி, தாம் அளித்த தீர்ப்பையே மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார்.

கோட்டயத்தில் 'இந்து' நாளேட்டுக்கு அவர் அளித்த பேட்டி, 25.2.2013 தேதியில் அந்த ஏட்டின் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அவர் இரண்டு முக்கிய கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

1) இந்த மூவரும் 22 ஆண்டுகளாக சிறையில் உள்ளார்கள். இவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்குமானால் இந்திய தண்டனை சட்டப்பிரிவு 433 (ஏ) பிரிவின் கீழ் 14 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு தண்டனைக் குறைப்பு கோரியோ, தண்டனைகளை தளர்த்தக் கோரியோ சலுகைகளைப் பெற்றிருக்க முடியும். ஆனால், 22 ஆண்டு சிறையில் இருந்துவிட்டனர். இதுவே ஒரு தண்டனை. இதற்குப் பிறகு அவர்களை தூக்கிலிடுவது, "இரட்டிப்பு தண்டனை" வழங்குவதே ஆகும். ஒரு குற்றத் துக்காக இரண்டு தண்டனைகளை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை. அடிப்படை உரிமைகளில் ஒன்றான சட்டப்பிரிவு 21க்கு இது எதிரானது.

2) 2010 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு (நீதிபதி எஸ்.டி.சின்கா வழங்கியது), குற்றம் சாட்டப்பட்டவர்களின் நடத்தை, சுபாவம், சமூகப் பின்னணி போன்றவற்றையும் கவனத்தில் கொண்டே தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆனால், இந்தத் தூக்குத் தண்டனையை வழங்கிய போது, "குற்றவாளிகளின்" நடத்தைகள், பண்புகளை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லை. இதனால் தீர்ப்பில் 'ஓட்டை' விழுந்து விட்டது (This was a flaw in the judgement).

3) நீதிபதியாக நான் பதவியேற்றபோது எனது சொந்த விருப்பு வெறுப்புகள், நீதி வழங்கும் கடமையில் செல்வாக்கு செலுத்தக் கூடாது என்று நான் உறுதி ஏற்றேன். அந்த கண்ணோட்ட அடிப்படையில் மட்டுமே நின்று மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இப்போது குற்றம்சாட்டப்பட்டவர்களின் பின்னணியை கருத்தில் கொள்ள வேண்டும் என்ற தீர்ப்பு அடிப்படையில் நான் வழங்கிய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எனது கருத்து. ஏற்கனவே நளினி தொடர்பாக நான் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக அரசு தொடர்ந்த வழக்கிலும், இந்தத் தீர்ப்பில் மறுபரிசீலனை தேவை என்ற கருத்தை நான் பதிவு செய்திருக்கிறேன் என்று நீதிபதி கே.டி.தாமஸ் கூறியுள்ளார்.

1999 மே 11 ஆம் தேதி நீதிபதிகள் தாமஸ், சயீத்ஷா, முகம்மது குவாத்ரி, டி.பி.வாத்வா ஆகிய மூவரடங்கிய அமர்வு மூவருக்கும் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது. அப்போது நீதிபதி தாமஸ் மட்டும் தனியாக நளினிக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்று தீர்ப்பில் கூறியிருந்தார். நளினிக்கு ராஜீவ் கொலை சதித் திட்டம் குறித்து முன் கூட்டியே தெரிந்திருக்கவில்லை. அத்துடன் தம்பதியர்களான நளினி-முருகன் இருவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கிவிட்டால், அவர்களின் குழந்தை அனாதையாகிவிடும் என்ற காரணங்களுக்காக நளினிக்கு ஆயுள் தண்டனை வழங்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து தி.மு.க. அமைச்சரவை, தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நளினிக்கு தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து, மற்ற மூவரையும் தூக்கிலிடலாம் என்று முடிவு செய்தது.

தூக்குத் தண்டனையை ஏற்கவில்லை என்பதை கொள்கையாகக் கூறி வரும் தி.மு.க. ஆட்சி, அதே கொள்கை அடிப்படையில் இந்த 3 தமிழர்களுக்கும் அப்போதே ஆயுள் தண்டனையாக குறைத்திருக்க முடியும். ஆனால் குறைக்கவில்லை. மூவர் கருணை மனுக்களையும் நிராகரிக்க அமைச்சரவை முடிவு செய்தது. இப்போது தீர்ப்பு வழங்கிய நீதிபதி கே.டி. தாமஸ், புலன் விசாரணை நடத்திய அதிகாரி கார்த்திகேயன் ஆகியோரே மூவர் தூக்குத் தண்டனைக்கும் எதிராக கருத்துக்களைக் கூறி விட்டனர்.

தூக்குத் தண்டனை சட்டப் புத்தகத்திலிருந்தே நீக்கப்பட வேண்டும்!

# ஆர்.எஸ்.எஸ். சலசலப்புகளை முறியடித்து சூலூர் ஒன்றியத்தில் 'மனுசாஸ்திர' எதிர்ப்புப் பயணம்

மனு சாஸ்திர எரிப்பு விளக்க பரப்புரைப் பயணம் 10.2.13 அன்று சூலூர் ஒன்றியம் இராவத்தூரில் துவங்கியது. கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜி, கழக வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச் செல்வி, திருப்பூர் மாவட்டத் தலைவர் துரைசாமி, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, சுயமரியாதைக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் அ.ப.சிவா, திருப்பூர் முகில்ராசு, சூலூர் பன்னீர்செல்வம், கிணத்துக் கடவு நிர்மல் மற்றும் சூலூர் ஒன்றிய தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மனுதர்மம் என்றால் என்ன? மனுதர்மத்தின் சமூக ஒடுக்கு முறை, இழிவுகள் என்பதைப் பற்றி பொது மக்களிடம் தோழர்கள் விளக்கிப் பேசினர்.

இரண்டாம் கட்டப் பயணம் 17.2.13 அன்று கண்ணம்மாளையம், பள்ளபாளையம், பாப்பம் பட்டி ஆகிய ஊர்களில் நடைபெற்றது. இறுதியாக பாப்பம்பட்டியில் இரவு 8 மணிக்கு பரப்புரை நடந்தது. அந்த ஊரிலுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இங்கு நிகழ்ச்சி நடத்தக் கூடாது என்று காவலர்களிடம் தகராறு செய்தனர். தோழர்கள் அதனை பொருட்படுத்தாமல் நிகழ்ச்சியை தொடர்ந்தனர். பொள்ளாச்சி விஜயராகவன் பேசுகையில், "இராமாயணத்தில் வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் நடக்கும்போது, ராமன் மறைந்து நின்று தாக்கியதைப்போல் அல்லாமல் எங்கள் முன் நேருக்கு நேர் கருத்து வாதத்துக்கு வாருங்கள்" என்று அறைகூவி அழைத்தார்.

உடனே ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள், 'இராமனைப் பற்றி பேசாதே, ஜாதியைப் பற்றி மட்டும் பேசு' என்று தகராறு செய்ததற்கு, கிணத்துக்கடவு தோழர் நிர்மல் பதிலடி தந்து பேசினார். "ஆம்; ஜாதியைப் பற்றி பேசுகிறேன்; எங்கள் ஊரில் ஆர்.எஸ்.எஸ்சில் முக்கிய பொறுப்பு வகிக்கக்கூடிய ராஜேஷ் என்பவர், அந்த ஊரிலுள்ள கோவிலுக்குள் செல்ல அனுமதியில்லை. காரணம் அவர் ஒரு தலித். இங்கே, எதிர்ப்பு தெரிவிக்கும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களே நான் உங்களை கேட்டுக் கொள்வது நீங்கள் எப்படியாவது போராடி, அந்த ஆர்.எஸ்.எஸ்.காரரை கோவிலுக்குள் ஒரு அடி எடுத்து வைக்கச் சொல்லுங்கள். உங்களால் செய்ய முடியுமா?" என்று சவால் விடுத்தார்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடமிருந்து எந்த சத்தமும் கேட்கவில்லை. சூலூர் பன்னீர் செல்வம், தொடர்ந்து மனுதர்மத்தைப் பற்றியும், அதிலுள்ள இழிவான கருத்துக்களைப் பற்றியும் விளக்கிப் பேசினார்.

## இலங்கை வங்கி தாக்குதல்: கழகத் தோழர்கள் பிணையில் விடுதலை

சென்னையிலுள்ள இலங்கை வங்கியைத் தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள 6 கழகத் தோழர்களுக்கும் சிறையிலிருந்தபோதே அவர்களுக்கு பிணை கிடைக்க விடாமல் செய்வதற்காக ரிலையன்ஸ் நிறுவனம் மீது தாக்கியதாக பொய் வழக்கையும் காவல்துறை போட்டது. இரண்டு வழக்குகளிலும் பிணை கிடைத்து, 13 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு பிப்.21.2.2013 காலை 10.30 மணியளவில் தோழர்கள் விடுதலையானார்கள். பிணையில் விடுதலையான 6 பேருக்கும் இராயப்பேட்டை கழக படிப்பக வாயிலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மற்றொரு தோழர் பிரதீப், சைதை சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து பிப்.22 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான தோழர்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருப்பு ஆடை போர்த்தினார்.

பிணையின் நிபந்தனையாக இரண்டு வழக்குகளிலும் ஒவ்வொரு தோழருக்கும் ரூ.7500 பணம் கட்ட நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. கழகத் தோழர்களுக்காக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, சண்முகம் ஆகியோர் நேர் நின்றனர்.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

- 23-01-2013 புதன்கிழமை அன்று காலை 9-00 மணியளவில், நங்கவள்ளியில், கழகத் தோழர் கண்ணன் யசோதா ஆகியோர் புதிதாக கட்டியுள்ள "யாழினி இல்லம்" கழகத் தலைவர் கொளத்தூர் கொளத்தூர் மணி அவர்களால் ரிப்பன் வெட்டி திறந்து வைக்கப்பட்டது. நிகழ்ச்சியின் முன்னதாக அந்த இல்லத்தின் மாடியில், ஜெயந்தி-மனோஜ்குமார் (கண்ணனின் சகோதரர்) ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. மிக எளிமையாக, சிக்கனமாக, எண்ணிக்கை குறைவான உறவினர்களை மட்டும் வைத்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சிகளை கழகத் தலைவர் தனது உரையில் சுட்டிக்காட்டி, பாராட்டு தெரிவித்தார்.
- 25-01-2013 வெள்ளிக்கிழமை அன்று காலை 11-00 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி லெக்ஷ்மி பிரியா திருமண மண்டபத்தில், வி.சசிக்குமார் கே.சுகாசினி ஆகியோரது திருமணம் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலித் சுப்பையா முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.
- 27-01-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10-00 மணியளவில், சேலம் மாவட்டம் இளம்பிள்ளை எஸ்.ஏ.சபாபதி திருமண மண்டபத்தில், கழகத் தோழர் அ.செசந்திர சேகரன் கு.பிரியங்கா ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடை பெற்றது. சாலையின் நீண்ட தூரம் கழகக் கொடிகள் கட்டப்பட்டு, மண்டபம் முழுவதும் பெரியாரின் பொன்மொழிகள் அமைக்கப்பட்டு, கழக நிகழ்ச்சியாக நடைபெற்ற இந்த விழா, மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவினர் பகுத்தறிவு பாடல் களோடு துவங்கியது. வெங்காயம் திரைப்பட இயக்குநர் சங்ககிரி ராசகுமார் வாழ்த்துரை வழங்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்க உரையாற்றி வாழ்க்கை இணையேற்பை நடத்தி வைத்தார். கழக ஏட்டின் வளர்ச்சிக்காக ஆயிரம் ரூபாய் (ரூ-1000) நன்கொடை வழங்கப்பட்டது.

## அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்

16.2.2013 அன்று விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அப்சல் குரு படுகொலையை கண்டித்து சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத் திற்கு ச.கா. இளையராஜா முன்னிலை வகிக்க, சே.பிரபு தலைமை வகிக்க, மனித உரிமை பொறுப்பாளர்கள் ப.ரவி, ஏ.ஆர். சவுகத் அலி, ஆறுமுகம், த.மு.மு.க.வை சார்ந்த முபரக், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த சிலம்பன், தலித் சந்திரன், கழகத் தோழர்கள் ந. வெற்றிவேல், க.ராமர், நா.அய்யனார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

விழுப்புரம் கழக மாவட்ட பொருப் பாளர் ச. பெரியார் வெங்கட், சி. துரை, செ. நவப் பிள்ளை, ச. ஆசைத்தம்பி உள்ளிட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## ஜாதிவெறி சக்திகளுக்கு கொளத்தூர் மணி கேள்வி

# உயர் கல்வியில் மறுக்கப்படும் பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்குப் போராடாமல், தலித் மக்களை எதிர்க்கப் போராடுவதா?

*மய்ய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டே வருகிறது. அதை எதிர்த்து போராடாத ஜாதித் தலைவர்கள், தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக போராடக் கிளம்புவது என்ன நியாயம்? என்று ஈரோட்டில் டிசம்பர் 24 அன்று நடந்த மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டார். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

நம் நாட்டில் திருக்குறளையும் பேசுவார்கள்; மனுவாதியாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசியம் பற்றி என்னுடைய தொலைக்காட்சி நேர்காணலில் சொன்னேன். தமிழ்த் தேசியம் என்றால் என்னய்யா? தமிழர்களுக்கு உரிமை வேண்டும்; தமிழக உரிமைக்காக போராட வேண்டும் என்பது தானே? நான் இரட்டைக் குவளையைப் பற்றி ஒட்டன்சத்திரத்திலுள்ள வாகரை என்ற ஊரில் நடந்த கூட்டத்தில் பேசினேன். அப்போது ஒருவன் (ஜாதியவாதி) பேசினான், 'நீ என்ன தி.க.காரன் தானே? நீ அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதைப் பற்றிப் பேசு. இடஒதுக்கீட்டைப் பற்றிப் பேசு. இரட்டைக் குவளையை உடைக்கச் சொல்லி என்றைக்கு பெரியார் சொன்னார்?' என்றான். அப்படித்தான் அவனிடம் நாம் 'அறிமுகம்' ஆகித் தொலைத்திருக்கிறோம். அடுத்த கூட்டத்தில் காவிரி நீர் உரிமைக்குப் பேசு என்றான். அப்போது நான் சொன்னேன், 'சரிய்யா தமிழ்த் தேசியம்-காவிரி நீர் உரிமைக்குப் பேசுகிறேன். கர்நாடகக்காரனிடம் சண்டை போடுவோம். சரி; ஏண்டா உள்ளூரில் இருக்கின்ற தாழ்த்தப்பட்டோருக்கு தண்ணீர் போவதற்கு போடப்பட்ட குழாயை மூன்றுமுறை உடைத்து விட்டாயே? நீ போய் கர்நாடகக்காரனிடம் தண்ணீர் கேட்க உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்டேன். (பலத்த கைத்தட்டல்) அந்த ஊராட்சி மன்றத் தலைவரான தாழ்த்தப்பட்டவர் தன் பகுதிக்கு குடிநீர் எடுத்துச் செல்ல முயன்றபோது மூன்று முறை அந்தக் குடிநீர் குழாயை உடைத்தனர், ஆதிக்க ஜாதியினர்.

அந்த ஊரில் தான் சொன்னோம், இவரைச் சேர்மேன் என்பார்கள். இவர் சேர்மேன் இல்லை ஃப்ளோர்மேன் என்று. ஏனென்றால், அந்த ஊராட்சி மன்றத் தலைவரை கீழேதான் உட்கார வைக்கிறார்கள். நாற்காலியில் உட்கார விடுவதே இல்லை. அவர் வாகறை ஊராட்சி மன்றத் தலைவர். சின்னான் என்று பெயர், அருந்ததியர். அவரைக் கீழேதான் உட்கார வைக்கிறார்கள். துணைத் தலைவர்தான் நாற்காலியில் உட்கார்ந்து கூட்டத்தை நடத்துவார். இந்த ஊர் ஃப்ளோர்மேன் சொன்னார் என்று சொன்னேன். ஃப்ளோர்மேன் தான் தீர்மானத்தை போட்டார். சேர்மேன் இல்லையே அவர். எவ்வளவு கொடுமை? முதலில் எங்கள் எல்லோரையும் மனிதன் என்று ஒத்துக் கொள்ளுங்கள். அதற்கு எவ்வளவு முயற்சி செய்கிறோம்? மற்ற உரிமைகள் எல்லாம்கூட பிறகு வரட்டும். சமஉரிமை உடைய மனிதர் என்று ஒப்புக் கொள். ஒன்றே ஒன்று பிற்படுத்தப்பட்ட தலைவர்களுக்குச் சொல்ல வேண்டும். இப்போது தாழ்த்தப்பட்டோர் பதவி உயர்வுக்கான தீர்மானத்தை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். நாடாளு மன்றத்திலும் அது வர இருக்கிறது. இருக்கட்டும். ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்று இந்த பிற்படுத்தப்பட்ட தலைவர்கள் எல்லாம் மிகவும் முயற்சி எடுத்துப் போராடுகிறார்கள். யார் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு கேள்வியை நாங்கள் முன் வைக்கிறோம். மய்ய அரசுப் பணிகளின் புள்ளி விவரங்கள் உங்களிடம் இருக்கிறதா? அமைச்சர் நாராயணசாமி 2008 நவம்பரில் ஒரு புள்ளி விவரம் சொன்னார். இப்போதும் ஒரு முறை சொன்னார்.

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் 20.60 விழுக்காடு உள்ளனர். 3, 4, 5ஆம் நிலைப் பதவிகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் 24.79 விழுக்காடுள்ளனர். பிற்படுத்தப்பட்டவர்களோ வெறும் 7.11 விழுக்காடு மட்டும்தான். மய்ய அரசின் முதல்நிலைப் பதவிகளில் தாழ்த்தப்பட்ட/பழங்குடி மக்கள் 17.39 விழுக்காடு உள்ளனர். ஆனால், அவர்களுக்கு 22.5 விழுக்காடு கொடுக்க வேண்டும். 17.39 விழுக்காடு என்பது குறைவுதான். ஆனால், 52 விழுக்காடு மக்கள் தொகை உள்ள பிற்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதில் எவ்வளவு தெரியுமா? வெறும் 5.44 விழுக்காடுதான். யாரப்பா கீழ்ஜாதி, யார் தாழ்ந்த ஜாதி என்று கேட்டோம்? இரண்டாம் நிலைப் பணிகளில் 3.97 விழுக்காடு தான் பிற்படுத்தப்பட்டோர் உள்ளனர்.

நீ பிற்படுத்தப்பட்ட ஜாதித் தலைவன் என்றால், ஏண்டா என் ஜாதிக்காரனுக்கு போதுமான வேலை கொடுக்கவில்லை என்று அவனிடம் (மய்ய அரசு) போய் சண்டை போடு. இங்கே உட்கார்ந்து சண்டை போடுகிறாயே நீ? சண்டை போடுகிற இடத்திற்கு நீ போக மாட்டாய். இங்கே உட்கார்ந்து ஏமாந்தவனிடம் சண்டை போடுகிறாயா நீ? நீ என்ன பிற்படுத்தப்பட்டவர்களின் தலைவன்?

ஒவ்வொரு பிற்படுத்தப்பட்டவர்களும் அவர்கள் தலைவன் வருகிறபோதெல்லாம் இப்படிக் கேட்க வேண்டும். எங்களுக்கு ஏனய்யா போதுமான இடஒதுக்கீடு இல்லை. 27 விழுக்காடு 1994-லிலேயே நடைமுறைக்கு வந்துவிட்டதே? இன்றைக்கு வரைக்கும் மய்ய அரசின் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு என்ன இடஒதுக்கீடு? அதற்கு நீ என்ன செய்தாய் சொல்? பட்டியலைக் கொடு. தமிழ்நாடு அரசு தன் செலவில் நடத்துகிற மருத்துவக் கல்லூரிகளில் முதுகலைக் கல்வியில் அனைத்திந்திய ஒதுக்கீடு என்ற பெயரில் 50 விழுக்காடு இடங்களை அவன் வாங்கிக் கொண்டு செல்கிறான். அதில் இடஒதுக்கீடு தருவதில்லை. மீதி இருக்கிற 50 விழுக்காடு இடங்களைத் தான் தமிழ்நாடு அரசு இடஒதுக்கீடு தர முடியும். அதற்குப் போராடுங்கள். அதற்காக வாய்திறந்து பிற்படுத்தப்பட்ட தலைவர்கள் பேசாதவரை, பிற்படுத்தப்பட்ட மக்களே உங்கள் தலைவர்கள் வந்தால் இதைப் பேசிவிட்டு வாடா என் ஊருக்கு என்று நாம் போராட வேண்டும். அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களை போராடச் செய்ய வேண்டும். என் பேச்சை நீட்டிக்க விரும்பவில்லை. தோழர்களே! நம்முடைய தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் 1927-லேயே மனு சாஸ்திரத்தை எரித்துவிட்டார்கள். பெரியார் காங்கிரஸ்காரராக இருந்தபோதே சொன்னார். 1922 திருப்பூர் மாநாட்டில் சொன்னார், 'தாழ்த்தப்பட்டவர்களையும், நாடார்களையும் கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதை கொள்கையளவில் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளட்டும் என்று கேட்டார். ஏற்றுக் கொள்ளவில்லை காங்கிரஸ் கட்சி. அதை எதிர்த்தவர் யார் என்றால், 1939இல் கோயில் நுழைவுப் போராட்டத்துக்குக் காரணமாக இருந்தவர் என்று சொல்லப்பட்ட வைத்தியநாத அய்யர்தான். அப்போது, 'உனக்கு சாஸ்திரம் தெரியுமா? இராமாயணம் தெரியுமா?' என்று வைத்தியநாத அய்யர் கேட்டதற்கு, அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் சொன்னார், 'மனு சாஸ்திரமும், இராமாயணமும் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் நுழையத் தடையாக இருந்தால், அதை இரண்டையும் எரிக்கணுமே தவிர இதைப் பற்றிப் பேசக் கூடாது' என்றார். 'இராமாயணத்தையும் மனு சாஸ்திரத்தையும் எரிப்போம்' என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தபோது 1922இல் திருப்பூர் மாநாட்டில் பெரியார் பேசினார். (கைதட்டல்)

இப்போது நாம் ஒன்றும் புதிதாகச் செய்யவில்லை. நம்முடைய தலைவர்கள், வழிகாட்டிகள் இருவரின் காலத்தில் இருந்ததைவிட நம் உணர்வுகள் மங்கிப் போய் இருக்கிறது. நாம் தூங்கிப் போனவர்களாக, விழிப்பற்றவர்களாக இருக்கிறோம். நாம் விழிப்புக் கொள்வோம்; போராடுவோம். மனுசாஸ்திர எரிப்பு என்பது ஒரு குறியீடு. யாரும் அதைப் பார்த்து படித்து எதுவும் சொல்வதில்லை. பெரியார்தான் சொல்வார், 'ஏண்டா, வேதத்தைப் படிக்கக் கூடாது என்கிறாய். இந்துவாக இரு என்கிறாய். நான் படித்துப் பார்க்கிறேன். பிடித்தால் இருக்கிறேன். இல்லையென்றால் போய்விடுவேன். என்னை படிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு இந்துவாய் இரு என்று சொல்கிறாய். பத்திரத்தை எழுதிவிட்டு, அதைப் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போடு என்று சொல்லுகிற அயோக்கியப் பயலுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்' என்று கேட்டார்.

வேதத்தைப் படிக்காதே; ஆனால் இந்து மதத்தில் இரு. ஆனால், இப்போது மனுசாஸ்திரத்தை நாங்கள் படித்து விட்டோம். எங்கள் முன்னோர்கள் எல்லாம் அதை மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்கள். எனவே, அதைப் படித்து விட்டோம். புரிந்து கொண்டோம். இந்தக் காலகட்டத்திலாவது குறியீடான இந்தப் போராட்டம் நடத்த உள்ளோம். மனுசாஸ்திரம் என்ற புத்தகத்தை எரித்துவிட்டால் எல்லாம் முடிந்து போவது இல்லை. ஆனால், இது கிளப்புகிற விவாதம், இது கிளப்புகிற உணர்ச்சி, இது கிளப்புகிற எழுச்சி - ஜாதி ஒழிந்த சமுதாயத்தைப் படைப்பதற்கு துணை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்தப் போராட்டத்தை நாங்கள் முன் எடுத்திருக்கிறோம் என்று சொல்லி, இந்த இறுதித் தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன். நீங்கள் வழிமொழிய உங்கள் கையொலியை எழுப்புங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'ஜாதி-தீண்டாமையின் வடிவங்கள்' தொடர்ந்து நிலைபெற்று இருப்பதை இம்மாநாடு கவலையுடன் சுட்டிக் காட்டுகிறது. தாழ்த்தப்பட்டோரின் வாழ்விடங்கள், ஊரிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதை மாற்றுவதற்கு அரசு கட்டித்தரும் தலித் மக்களுக்கான குடியிருப்புகள், ஆதிக்க ஜாதிகள் வாழும் ஊர்ப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு களாகக் கட்டித் தர வேண்டும். ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் 'ஜாதியற்றோர்' என்ற பிரிவை உருவாக்கி, அவர்களுக்கு தனியாக இடஒதுக்கீடு வழங்க வேண்டும். இடஒதுக்கீட்டைத் தவிர வேறு எந்த வடிவிலும் ஜாதி அடையாளத்தைப் பயன்படுத்தக் கூடாது. திருமண மண்டபங்கள் உள்ளிட்ட தேனீர் கடைகள், முடிதிருத்தகங்கள், வழிபாட்டு இடங்கள் என்பன போன்ற பொது பயன்பாட்டுக்கான இடங்களில் தீண்டாமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் போன்ற ஜாதி-தீண்டாமை ஒழிப்புக்கான தீர்மானங்களை திருப்பூரில் கடந்த 29.4.2012 இல் நடத்திய ஜாதி-வாழ்வியல் எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் அந்த ஜாதி-தீண்டாமைக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கும் பார்ப்பனிய, மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தை அறிவித்தோம். இப்போது 'தலித் மக்களை தனிமைப்படுத்துதல்' என்ற செயல் திட்டதோடு ஜாதிக் கட்சிகள் வெளிப்படையாக இயக்கங்கள் நடத்தி, தமிழகத்தை பின்னுக்கு இழுத்துச் செல்லும் ஆபத்துகள் உருவாகி உள்ளன.

இப்படிப்பட்ட இந்த மனுவாத ஜாதியக் கட்சிகளுக்கு எதிராக மக்களைத் திரட்டி அவர்களிடம் விழிப்புணர்வை உருவாக்கவும், மனு சாஸ்திர அடிப்படையில் ஜாதி-தீண்டாமைக் கொடுமைகள் நிலைப்பாட்டை மாற்றி அமைக்கக் கோரியும், 'ஜாதி எதிர்ப்பு மாநாடு'களை நடத்திடவும், அதற்கான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, 'ஜாதி-தீண்டாமைக்கு எதிரான பரப்புரைப் பயணங்கள் நடத்திடவும், ஒவ்வொரு பயணத்தின் நிறைவிலும் அந்தந்த மண்டலங்களில் ஜாதி எதிர்ப்பு மாநாடுகளை நடத்துவது என்றும் இந்த மாநாடு தீர்மானிக்கிறது. அதன் அடிப்படையில், ஜனவரி 22 சென்னையிலும், பிப்ரவரி 16 சேலத்திலும், பிப்ரவரி 18 திண்டுக்கல்லிலும், பிப்ரவரி 23 தஞ்சையிலும், மார்ச் 9 திருநெல்வேலியிலும், மார்ச் 16 கோவையிலும், மார்ச் 23 புதுவையிலும், ஏப்ரல் 6 திருச்சியிலும் மாநாடுகள் நடத்திடவும் நிறைவாக, புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 அன்று தமிழ்நாடு எங்கும் மனுசாஸ்திரத்தை எரிக்கும் போராட்டத்தை நடத்துவது எனவும் இந்த மாநாடு தீர்மானிக்கிறது. (ஆரவாரம், பலத்த கைதட்டல்) பெரியாரின் நினைவு நாளில் எடுத்த இந்த முடிவை புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில் நிறைவேற்றுவோம் என்ற முழக்கத்தோடு விடைபெற விரும்புகிறேன். (பெருத்த ஆரவாரம்)

**உரைத் தொகுப்பு: ஜஸ்டின் ராஜ்**

DATE OF PUBLICATION 27.02.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஜாதி எதிர்ப்புக்கு இணைந்து போராட ஆர். நல்லக்கண்ணு அறைகூவல்






*முதல் பக்கத் தொடர்ச்சி*

**"யானும் நீயும் எவ்வழி யறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**

- என்று நம் தமிழ் இலக்கியம் குறுந்தொகை பாடல் கூறுகிறது. "அதாவது என்னை நீயும், உன்னை நானும் இதற்கு முன் அறிந்தோம் இல்லை என்றாலும், நம்முடைய அன்புடைய நெஞ்சங்கள் நிலத்தில் நீர் கலப்பதுபோல ஒன்றாகக் கலந்து விட்டது" என்று கூறுகிறது அந்தப் பாடல்.

தமிழர் பண்பாடு - ஜாதியை ஏற்றதில்லை; தமிழர் பண்பாடு பற்றிப் பேசுகிறவர்கள், ஜாதியை நியாயப் படுத்தலாமா? என்று கேட்டார், தோழர் நல்லக்கண்ணு.

மறைந்த பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவானந்தம் அவர்களின் மகளுக்கு பெரியாரே மணமகனைத் தேர்வு செய்து ஜாதி மறுப்பு திருமணம் செய்ததையும், அந்த மண விழாவில் பெரியார், அண்ணா, மணலி கந்தசாமி உள்ளிட்ட தமிழ்நாட்டின் மூத்த தலைவர்கள் பங்கேற்று வாழ்த்தியதையும் நினைவு கூர்ந்தார். பெண்ணுக்கு திருமண வயது 18 ஆகவும், ஆணுக்கு 21 ஆகவும் சட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் பெண்களுக்கு திருமண வயதை 21 ஆக உயர்த்த வேண்டும் என்றும், 18 வயது பக்குவப்படாத வயது என்றும் ராமதாசு கூறுகிறார். அதே 18 வயதுக்குரியோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதே. அதை இவர்கள் எதிர்க்காதது ஏன் என்ற கேள்வியை தோழர் நல்லக்கண்ணு எழுப்பினார்.

திருமணங்களை கட்டாயப் படுத்தி நடத்துவது எப்படி குற்றமாகுமோ அதே போன்று கட்டாயப் படுத்தி தடுப்பதும் குற்றம்தான். ஜாதி மறுப்பு இன்றைய சமுதாயத்தின் தேவை. ஜாதி மறுப்பு திருமணங்களை ஆதரிக்க வேண்டும். "ஜாதித் தமிழன் பாதித் தமிழன்" என்று ஒரு கவிஞர் எழுதினார். அவன் முழுத் தமிழனாக முடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் தலைதூக்க முயற்சிக்கும் ஜாதி வெறியை முறியடிக்க பெரியார் இயக்கங்களும், பொதுவுடைமை இயக்கங்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து தோழர் நல்லக்கண்ணு தனது உரையை இறுதி செய்தார்.


மாநாட்டுத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்தப் பெரியாரின் ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாறு, காங்கிரஸ் கட்சிக்குள்ளே இருக்கும்போதே ஜாதியைப் பாதுகாக்கும் மனுசாஸ்திரம், இராமாயணத்தை எரிக்க வேண்டும் என்று பெரியார் முழக்கமிட்டது; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிக் கிணறு அமைப்பதை காங்கிரசலிருந்த போதே எதிர்த்து, அனைவரும் பயன்படுத்தும் பொதுக் கிணறு திறக்க வலியுறுத்தியது; தாழ்த்தப்பட்டோரை தனிமைப்படுத்தி முன்னேற்றும் திட்டங்களுக்காக காங்கிரஸ் கட்சி அனுப்பிய பெரும் தொகையை, தான் தலைவராக இருந்தபோது ஏற்க மறுத்து திருப்பி அனுப்பியது என்ற வரலாற்று நிகழ்வுகளை கழகத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் தீர்மானங்களாக முன் வைத்துள்ள கோரிக்கைகளை விளக்கினார். ஜாதியற்ற திருமணத் தம்பதியினரின் வாரிசுகளுக்கு ஜாதியற்றோர் ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வீடுகளை 'காலனி', 'சேரி' என பிரித்து ஒதுக்காமல் பிற ஜாதியினர் வாழும் தெருக்களிலேயே கட்டிக் கொடுத்தல்; ஜாதி, மதம் கடந்த காதலர்களுக்கு பாதுகாப்பு வழங்க, காவல்துறையில் தனிப் பிரிவு, ஜாதிகளைக் குறிப்பிட்டு வெளியிடப்படும் திருமண வரன் தேடும் பத்திரிகை விளம்பரங்களுக்கு தடை போன்ற கோரிக்கைகளை எடுத்துக் காட்டி விளக்கினார்.

ஈரோடு மாநாட்டைத் தொடர்ந்து ஜாதி-தீண்டாமைக்கு எதிராக சென்னை, சேலம், திண்டுக்கல்லில் மண்டல மாநாடுகளை நடத்திய கழகம், அய்ந்தாவதாக திருவாரூரில் நடத்திய மாநாடு இது.

**– நமது செய்தியாளர்**

## பெரியாரிய எதிர்ப்பாளர்களுக்கு பதிலடி தரும் நூல்




*பெரியார் முன் வைத்த 'திராவிடர்' கோட்பாட்டுக்கு தவறான வரலாற்று உண்மைகளுக்கு மாறான திரிபுகளும் திருத்தல்களும் சில முகாம்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அந்த பொய்மைகள் ஒவ்வொன்றாக அம்பலப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், 'திராவிடம், பெரியாரியம் இன்றும் தேவையே' எனும் தலைப்பில், கவிஞர் தமிழேந்தியை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டிருக்கும் இந்த நூல் மிகச் சிறந்த கருத்தாய்வாக வெளிவந்திருக்கிறது. பெரியார் தமிழுக்கு எதிரி; திராவிடர் கழகம் பெயர் மாற்றத்தை திடீர் என்று மேற்கொண்டார்; 1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியவர்கள் தமிழ்ப் பண்டிதர்களே தவிர பெரியார் அல்ல; பெரியார் முன் வைத்த திராவிடம், ஆந்திர, கர்நாடக, கேரளத்தவருக்கு துணை செய்தது; பெரியார் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரி போன்ற உண்மைக் கலப்பற்ற வாதங்களை சுக்குநூறாக தகர்த்தெறியும் - பல்வேறு சிந்தனையாளர்களின் ஆழமான கட்டுரைகள் இடம் பெற்றிருப்பதோடு, தோழர் வே. ஆனைமுத்து, பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோரின் பேட்டிகளும் பெரியாருக்கு எதிரான வரலாற்றுப் புரட்டுகளை அம்பலப்படுத்துகிறது. பெரியாரியலாளர்களுக்கு வெளிச்சமும், திரிபுவாதிகளின் குழப்பங்களுக்கு ஆணித்தர மறுப்பாகவும் வெளி வந்துள்ள இந்த நூல் படிக்கவும் பரப்புவதற்கும் தகுதியான சிறந்த ஆவணமாகும்.*

*வெளியீடு: புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், வள்ளுவர் இல்லம், 44, இராசாசி வீதி, அரக்கோணம்-631001. பேசி:9443432069 152 பக்கங்கள். விலை: ரூ.70.*

## மாநாடு வெற்றிக்கு உழைத்த தோழர்கள்

*திருவாரூர் மண்டல மாநாட்டிற்காக மண்டல அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் இளையராஜா, நாகை மாவட்ட செயலாளர் மகேஷ், மயிலாடுதுறை கழகத் தோழர்கள் நாஞ்சில் சங்கர், அன்பரசன், செந்தில், ராசராசன், ஜெயராஜ் உள்ளிட்ட தோழர்கள், 6 நாட்கள் திருவாரூரில் தங்கி, திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசுடன் இணைந்து மாநாட்டுப் பணிகளை செய்தனர். திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி மற்றும் திருவாரூரில் கடை கடையாகச் சென்று மாநாட்டுக்கான 10,000 துண்டறிக்கைகளை வழங்கி, நன்கொடை திரட்டினர். துண்டறிக்கையில் வெளியிடப்பட்ட கருத்துகளை பலரும் படித்ததோடு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஜாதி-தீண்டாமை எதிர்ப்பு இயக்கம் பற்றிய செயல்பாடுகளை அறிந்து கொண்டனர். குடந்தை, தஞ்சை நகரங்களில் கொள்கை ஆதரவாளர்களை சந்தித்து, துண்டறிக்கைகளை வழங்கி நன்கொடை திரட்டினர். திருவாரூர் நகரம் முழுதும் 10க்கும் மேற்பட்ட மாநாட்டு விளம்பரப் பலகைகள் பெரிய அளவில் நிறுவப்பட்டிருந்தன. மாநாட்டுக்கு தஞ்சை, மயிலாடுதுறையிலிருந்து தனி வாகனங்களில் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். பல்வேறு தோழமை அமைப்புகளைச் சார்ந்தவர்களும், பொது மக்களும் ஏராளமாக மாநாட்டுக்கு வந்திருந்து, இறுதி வரை கருத்துகளைக் கேட்டது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.*

**தோழர்களே! 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ.200/- *உறுப்பினர்களை சேர்க்கும் பணியை தீவிரப்படுத்துங்கள்!***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th February 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.